விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 20 வியாழக்கிழமை (03.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 105

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# இலங்கையின் குற்றங்களுக்கு தண்டனை விதிக்கப்படும்



## தீர்மானத்துடன் இணங்கிச் செல்லுமாறு பான் கீ மூன் தெரிவிப்பு

(நியூயோர்க்)

இலங்கையில் இடம்பெற்ற குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மீண்டும் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

# ஏப்ரல் 15 பொது விடுமுறை

(கொழும்பு)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி பொது மற்றும் வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

தமிழ்-சிங்கள சித்திரை வருடப் புத்தாண்டு இம்மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை கொண்டாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# 'இராணுவத் தரப்பினரிடம் சரணடைந்த முழுக் குடும்பத்தினையும் காணவில்லை'

## முல்லை. நீதிமன்றில் பெண் சாட்சியம்

(வன்னி)

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் போனவர்கள் தொடர்பில் தொடுக்கப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பான வழக்கில், சம்பவத்தின நிகழ்வுகள் பற்றிய விசாரணை நேற்றுப் புதனன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் ஆரம்பமாகியுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள், இறுதி யுத்தத்தின்போது அரசாங்கத்தின் பாதுகாப்பு உத்தரவாதத்தை அடுத்து, இராணுவத்தினரிடம் சரணடைந்தனர்.

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அவர்கள் சரணடைந்ததை பல்லாயிரக்கணக்கான மக்கள் நேரடியாகக் கண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், அவ்வாறு சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது, எங்கே வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற தகவல்கள் இன்னும் தெரியவில்லை என சரணடைந்தவர்களின் குடும்பத்தினர் தெரிவித்திருக்கின்றனர்.

காணாமல்போனவர்கள் தொடர்பில் அவர்களின் உறவினர்கள் சிலர 20 ஆம் பக்கம் பார்க்க..

# கோத்தபாய இன்று முல்லைத்தீவுக்கு

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இன்றையதினம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விஜயம செய்ய உள்ளதுடன், முக்கிய நிகழ்வுகளில் கலந்துகொள்ள உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கேப்பாபிலவு பிரதேசத்தில் மீள்குடியேறிய குடும்பங்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட 100க்கும் மேற்பட்ட வீடுகளை பாதுகாப்புச் செயலாளர் கையளிக்க உள்ளார்.

மீள்குடியேறிய மக்களுக்கு மூன்று கட்டங்களாக நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடமைப்புத்திட்டத் 20 ஆம் பக்கம் பார்க்க..

# அனுபவமுள்ள வைத்தியர்களை தெற்கிற்கு இடமாற்ற முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் பணிபுரிந்து வரும் அனுபவம் வாய்ந்த வைத்தியர்கள் தென்னிலங்கையிலுள்ள வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் அவர்களின் இடத்திற்கு பெரும்பான்மையினத்தை சேர்ந்த வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

வடக்கில் வைத்தியர்களுக்கான பற்றாக்குறை அதிகமாக காணப்படும் நிலையில் தனிப்பட்ட நபர்களின் இலாப நோக்கம் கருதி மேற்படி வைத்தியர்களை இடமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

ஏற்கெனவே யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரிந்து வந்த அனுபவம் வாய்ந்த வைத்தியர்கள் மற்றும் வைத்திய நிபுணர்கள் பலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது சாவகச்சேரி வைத்தியசாலையில் பணிபுரிந்துவரும் வைத்தியர்களை இடமாற்றம்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப் 20 ஆம் பக்கம் பார்க்க..

# மலேசிய விமானத்தின் மர்மம் நீடிக்கும் !

## அறிய முடியாமலே போகும் என எச்சரிக்கை

(கோலாலம்பூர்)

விபத்துக்குள்ளானதாகக் கருதபபடும் மலேசியன் ஏர்லைன்ஸ் விமானத்துக்கு என்ன நேர்ந்தது என்ற மர்மத்தை அறிய முடியாமலே கூட போகலாம் என்று மலேசிய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

மலேசியக் காவல்துறைத் தலைமை அதிகாரி காலித் அபூபக்கர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

இந்த விமானம் காணாமல் போனது குறித்த கிரிமினல் விசாரணை நீண்டுகொண்டே போகலாம். இவ்விசாரணையில் ஒவ்வொரு சிறிய விஷயத்தையும் ஆராய வேண்டியிருக்கிறது என்றார்.

ஆனால் விசாரணையின் முடிவில் இந்த சம்பவத்துக்கான உண்மையான காரணம என்ன என்பதை 20 ஆம் பக்கம் பார்க்க..

# தேர்தல் முடிவுகள் அரசிற்கு பின்னடைவு

(கொழும்பு)

மேல் மற்றும் தென் மாகாண சபைகளின் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்திற்கு மாத்திரமல்ல அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்படுபவர்களுக்கும் அபாய அறிவிப்பை வழங்கியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி மக்களிடம் கோரியது போல், இந்த தேர்தலில் அரசாங்கம் என்ற மரத்தின் வேர்களை மக்கள் தளர்த்தியுள்ளனர்.

இந்த நிலைமையில், சகல தரப்பினரும் ஒன்றிணைந்து பொது போராட்டத்தின மூலம் மரத்தை 20 ஆம் பக்கம் பார்க்க..

# வடக்கில் கண்ணிவெடி அகற்ற சிறிய பரப்பளவே எஞ்சியுள்ளது!

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கில் சிறியளவிலான பரப்பிலேயே கண்ணிவெடி அகற்றப்படவுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

கண்ணிவெடி அகற்ற வேண்டிய 2004 சதுர கிலோ மீற்றரில் 82 சதுர கிலோ மீற்றரே எஞ்சியுள்ளது. அதுவும் வனப்பகுதி என அவர் குறிப்பிட்டார்.

கண்ணிவெடி அகற்றல் மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் ஒத்துழைப்பு கிடைக் 20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிலி பூமியதிர்ச்சி ஐவர் மரணம்

(சந்தியாகோ)

வட சிலி கடற்பரப்பில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றுள்ள பூமியதிர்ச்சியில் குறைந்தபட்சம் 05 பேர் மரணமடைந் துள்ளனர்.

இப்பூமியதிர்ச்சி ரிச்டர் அளவுகோலில் 8.2ஆக பதிவாகியுள்ளது. இதனைத் தொடர்ந்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

க்யூகியூ பகுதியின் வடமேற்கில் சுமார் 86 கிலோமீற்றர் ஆழத்தில் இப்பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க வளிமண்டல வியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிலியின் சில பகுதிகளில் 2.1 மீற்றர் உயரத் தில் கடல் அலைகள் எழுந்தன. இதனால், அங்கு மின்விநியோகம் தடைப்பட்டுள்ளது. பாதிக் கப்பட்ட இடங்களிலிருந்து பத்தாயிரக் கணக்கான மக்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதாகவும் வெளிநாட் டுச் செய்திகள் தெரி விக்கின்றன.

இந்நிலையில், இந்து சமுத்திரத்தை அண்டியுள்ள நாடுக ளுக்கு பாதிப்பு ஏற் படக்கூடிய சாத்தியக் கூறு நிலவுவதாக வும் தெரிவிக்கப்படு கின்றது. (செ-11)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-3199) (C-6939)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### புறநிலைப் படிப்புக்கள் அலகு
### Extra - Mural Studies Unit
### University of Jaffna
### பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு பின்வரும் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்களைத் தகுதியானவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது. விரிவுரைகள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறும். 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் இப் பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

பதிவுக் கட்டணம் : ரூபா. 500.00

பயில விரும்புபவர்கள் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் தங்களின் சுயவிபரக்கோவையினை இணைத்து இணைப்பாளர், புறநிலைப் படிப்புக்கள் அலகு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி பதிவினை மேற்கொள்ளலாம்.

பாடநெறிகளைப் பயில விரும்புபவர்கள் எத்தனை பாடநெறிகளுக்கும் விண்ணப்பிக்க முடியும். ஆயினும் ஒரே நேரத்தில் ஒரு பாடத்துக்கே அனுமதிக்கப்படுவர்.

**விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் திகதி 05.05.2014**

1. அனர்த்த முகாமைத்துவத்திற்கான அடிப்படைகள் (Fundamentals of Disaster Management)
2. தொழிலியலுமைக்கான மென்திறன்விருத்தி (Soft skills for Employability)
3. விசேட தேவை மாணவர்களுக்கான கல்வி (Special needs Education)
4. முன்பள்ளிக் கல்வி (Pre - School Education)
5. ஆரம்பக் கல்வி (Primary Education)
6. தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (English for Communication)
7. அலுவலகர்களுக்கான ஆங்கிலம் (English for Office Staff)
8. அலுவலக முகாமைத்துவம் (Office Management)
9. மனித உரிமைகள் (Human Rights)
10. மனிதவள முகாமைத்துவம் (Human Resources Management)
11. சிறுதொழில் முகாமைத்துவம் (Small Business Management)
12. தாதிப்பராமரிப்பும் முதலுதவியும் (Nursing and First aid)
13. சோதிடக் கலை (Astrology)
14. வழிகாட்டலும் ஆற்றுப்படுத்தலும் (Guidance and Counseling)
15. சிறுவர் - இளையோர் உளவியல் (Child & Adolescence Psychology)
16. யோகாவும் உளவியலும் (Yoga Psychology )

மேற்படி பாடநெறிகளில் தகுதியும் திறமையும் படைத்தவர்கள் வளவாளர்களாகப் பணியாற்ற விரும்பின் தங்களுடைய துறைசார் திறமைகளை உறுதிப்படுத்தக்கூடியவாறு தங்களைப் பற்றிய சுயவிபரக் கோவையினை இணைப்பாளர், புறநிலைப் படிப்புக்கள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

- பதிவாளர் -

(C-6851)

# விசாரணையின் போது மயங்கிய சாட்சி!

பிரித்தானிய பிரஜை குராம் ஷேக் கொலை வழக்கின் பிரதான சாட்சியாளர், சட்டத்தரணி யின் கேள்விக் கணைகளினால் மயங்கி விழுந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின்போது, தங்காலை தி நேசர் ஹோட்டலின் முகாமையாளர் தரங்கா பீரிஸ் சாட்சியமளித்தார்.

ஷேய்க், கெட்டவார்த்தைகளை பயன் படுத்தினாரா என்பது குறித்து சட்டத்தரணி தொடர்ச்சியாக பெண் முகாமையாளர் பீரிஸிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதனால் அசௌகரியத்திற்கு உள்ளான தரங்கா பீரிஸ் ஒரு தடவை சாட்சி கூண்டை விட்டு வெளியேறியுள்ளார்.

எப் எழுத்தில் ஆரம்பமாகும் நான்கு எழுத்துக்களைக் கொண்ட ஆங்கில கெட்ட வார்த்தையைப் ஷேய்க் பயன்படுத்தினாரா என மீண்டும் மீண்டும் சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இதனால் அசௌகரியமடைந்த குறித்த முகா மையாளர் சாட்சிக் கூண்டில் மயங்கி விழுந் துள்ளார். இதனைத் தொடர்ந்து வழக்கு விசார ணைகள் இன்றையதினம் ஒத்திவைக்கப் பட்டதாக நீதவான் அறிவித்துள்ளார்.

2011-ம் ஆண்டு நத்தார் பண்டிகையன்று குராம் ஷேய்க் மற்றும் அவரது ரஷ்ய நாட்டுக் காதலி ஆகியோர் கொடூரமான முறையில் தாக்கப்பட்டனர். இந்த தாக்குதல் சம்பவத்தில் ஷேய்க் கொல்லப்பட்டார்.

சம்பவத்துடன் தங்காலை பிரதேச சபை யின் தலைவர் சம்பத் விதான பத்திரண விற்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளது. (செ-11)

## கடைகள் வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு

நீர்வேலி பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிர தான வீதியில் கந்தசுவாமி கோவிலுக்கு அருகா மையில் அமைந்துள்ள 10 விசாலமான கடைகள் வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு தொடர்பு :
0774348488, 0214924570

# உண்ணாவிரத போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ். வர்த்தகர்களின் அவ லத்தை கண்டித்து நடத்தப்படும் உண்ணா விரதப் போராட்டம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபம் முன்னாக முன்னெடுக்கப்பட வுள்ளது.

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஒரு மாதகாலத்திற்கு தற்காலிகமாக வீதியோர வியாபாரம் செய்வதற்கு பிற மாவட்ட மற்றும் பிறநாட்டு வியாபாரிகளுக்கு அனுமதி அளித்தமைக்கு எதிர்ப்பு தெரி விப்பதற்கே இவ்வுண்ணாவிரதம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர் களால் தெரிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதிகள், யாழ்ப்பாண வர்த் தகர்கள், பொது அமைப்புக்கள், பொது மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் மாறும் இதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (செ-11)

## காணி விற்பனைக்குண்டு

கொடிகாமம் புகையிரத நிலையத்துக் கருகில் பத்துப் பரப்புக் காணி தென்னை மரங்களுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு :
0776062882

(C-6853)

## உடன் விற்பனைக்கு

கொங்கிறீட் கல் அரியும் இயந்திரம் அச்சுக்கள் 04, அச்சுப் பலகைகள் 500-ம் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0774366704

(C-6854)

## சிறப்புப் பட்டிமன்றம்



திண்டுக்கல் ஐ.லியோனியால்
சிறந்த பேச்சாளரென்று மகுடம் சூட்டப்பட்ட
"சொல் வேந்தர்"
**பொன்.சுகந்தன்** அவர்களின்
தலைமையில்

இன்றைய அறிவியல் வளர்ச்சி
அழிவைச் செய்கின்றதா...? ஆக்கத்தை செய்கின்றதா...?

**அழிவினைச் செய்கிறது**

விகடகவி மு.திருநாவுக்கரசு அவர்கள்
(ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி)

சைவப் புலவர் சித்தாந்த பண்டிதர் சி.கா.கமலநாதன் அவர்கள்
த.அஜந்தகுமார் அவர்கள் (ஆசிரியர்)

**ஆக்கத்தைச் செய்கிறது**

சட்டத்தரணி G.இராஜகுலேந்திரா அவர்கள்
(கொழும்பு தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்)

தமிழ் விரிவுரையாளர் திருமதி மீரா அருள்நேசன் அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்-யாழ் வலயம்)

நயினை M.அம்பிகைபாகன் அவர்கள்

இடம் :- கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழக மைதானம் சண்டில்குளம் (சம்பந்தர்கடை அருகாமை, கரவெட்டி)
காலம் :- இன்று 03.04.2014 மாலை 9.00 மணி

-அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர் :
கரவெட்டி சண்டில்குளம் ஆதிஞானவைரவர் ஆலயத்தினர்

(6043)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் அமைப்புக்களின் தடையானது மனிதவுரிமை மீறல்களை மறைக்கும் செயலாகும்

## உலக தமிழர் பேரவை கொள்கை ஆலோசகர் தெரிவிப்பு

(கொழும்பு)

**புலம்பெயர்ந்த 16 தமிழ் அமைப்புகள் மற்றும் உலக தமிழர் பேரவை உட்பட்ட நான்கு தமிழ் புலம்பெயர்ந்தோர் நடவடிக்கை மையங்களை வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகளாக இலங்கை அரசாங்கம் பெயரிட்டு அவற்றை தடை செய்தமை வெட்கத்திற்குரிய செயல் என்று உலகத்தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.**

உலக தமிழர் பேரவையின் கொள்கை ஆலோசகர் மற்றும் பிரித்தானிய என்பீல்ட் நோட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் ரியான் இது தொடர்பில் விடுத்துள்ள குறிப்பில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு.

இலங்கையில் போர்க் குற்றம் தொடர்பாக சர்வதேச விசாரணையை கோருவோரை பயமுறுத்தவும் அமைதிப்படுத்தவுமே இலங்கை அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் இந்த தீர்மானம் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவை இலங்கை மீது அழைப்பு விடுத்துள்ள சர்வதேச விசாரணைக்கான ஒரு விடயமாக கருதமுடியாது. அரசாங்கத்தை பொறுத்தவரையில் இலங்கையின் வடக்கு கிழக்கில் மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கம் உருப்பெறுவதாகவும் அதனை கட்டுப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவித்துள்ளது. எனினும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி வி விக்னேஸ்வரன் அரசாங்கத்தின் இந்தக்கூற்றை மறுத்துள்ளார்.

அரசாங்கம், அரசியல் நோக்கத்துக்காகவும் இலங்கைப் படையினரை வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் வைத்திருக்கவுமே இந்த புதிய புலி உருவாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக சிவிவிக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளமையை ஜோன் ரியான் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம், குறித்த புலம் பெயர்ந்தோர் அமைப்புக்களை பயங்கரவாத அமைப்புகள் என்று தடைசெய்ததன் மூலம் அவற்றுடன் தொடர்பு கொள்ளும் இலங்கையில் உள்ள பொது மக்கள் மற்றும் நாட்டுக்கு செல்லும் புலம் பெயர்ந்தோருக்கு தடைகளை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கம் புலம் பெயர்ந்தோருடன் இணைந்து இனப் பிரச்சினைக்கான அடிப்படைகளை ஆராய்ந்து பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் அக்கறை கொண்டிருக்கவில்லை. இந்தநிலையில் சுதந்திரமான வெளிப்படுத்தலுக்கான தாக்குதலாகவே அரசாங்கத்தின் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள முடியும் என்று ரியான் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் அரசாங்கத்தின் நடவடிக்கையானது, இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை மேலும் பாதிக்கச்செய்து மனிதவுரிமை மீறல்களை மறைக்கும் செயலாகவே உள்ளதாக ரியான் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயத்தை கொண்டு சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முடியாது என்றும் உலக தமிழர் பேரவையின் கொள்கை ஆலோசகர் குறிப்பிட்டுள்ளார். (2)

# அரச கருமமொழிகள் ஆணைக்குழுவின் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

அரச கரும மொழிகள் ஆணைக்குழுவிற்கு கீழ் காணும் பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மொழி உத்தியோகத்தர் (வெற்றிடம்01) கல்வித்தகைமைகளாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல், மும்மொழிகளிலும் மொழி பெயர்க்கக்கூடிய அனுபவம் மற்றும் கணனி அறிவு இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி இம்மாதம் 20 ஆம் திகதியில் 18 வயதிற்கும் 45 வயதிற்குட்பட்டவராகஇருத்தல்வேண்டும்.

இணைப்பு உதவியாளர் (வெற்றிடம்-3) பதவிக்கான கல்வித்தகைமைகளாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மனித வள முகாமைத்துவம் மற்றும் சமூக விஞ்ஞானம் அல்லது மொழி சம்பந்தமான பட்டம் பெற்றிருத்தல், சிங்களம் தமிழ், ஆங்கில மொழிகளில் அறிவும் இம்மாதம் 20ஆம் திகதியில் 18 வயதிற்கும் 45 வயதிற்கும் உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

மொழி பெயர்ப்பாளர் (வெற்றிடம்-2) (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) பதவிக்கான கல்வித்தகைமைகளாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் தமிழ்/சிங்களம்/ஆங்கிலமொழியை ஒரு பாடமாகக்கொண்டு பட்டம் பெற்றிருத்தல் அல்லது மொழி பெயர்ப்பினை ஒரு பாடமாகக் கொண்டு சித்தி பெற்று பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி இம்மாதம் 20 ஆம் திகதி 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

முகாமைத்துவ உதவியாளர் (வெற்றிடம்1) பதவிக்கான கல்வித்தகைமைகளாக கல்விப்பொது தராதரப் பத்திர (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்/ கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கிற்கு மேற்பட்ட திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 6 சித்திகளுடன் கல்விப் பொது தராதரப் பத்திர (உ/த) பரீட்சையில் குறைந்தது மூன்றில் (பொது அறிவுப் பரீட்சை தவிர) சித்தி பெற்றிருப்பதுடன் இம்மாதம் 20 ஆம் திகதி 18 வயதிற்கும் 45 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் (வெற்றிடம்-1) (தமிழ்) பதவிக்கான கல்வித்தகைமைகளாக கணனி பாவனை பற்றிய அறிவு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் நடைபெறும் அந்தரங்க செயலாளர்களுக்கான கற்கை நெறியை திருப்தியாக முடித்திருத்தல், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் சுருக்கெழுத்தாளராக அல்லது சுருக்கெழுத்து தட்டெழுத்தாளராக இரு வருட அனுபவம் மற்றும் தட்டச்சு தமிழ் நிமிடத்திற்கு 35 சொற்கள் என்ற வேகம் இருத்தல் வேண்டும் . விண்ணப்பதாரி இம்மாதம் 20 ஆம் திகதி 18 வயதிற்கும் 45 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சிரேஷ்ட எழுதுவினைஞர் (தமிழ்) இப்பதவிக்கான கல்வித் தகைமைகளாக க.பொ.த.(சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/கணிதம்/ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட 4 க்கும் மேற்பட்ட திறமைச்சித்திகளுடன் ஒரே தடவையில் 6 சித்திகள் பெற்றிருப்பதோடு க.பொ.த.(உ/த) பரீட்சையில் குறைந்தது மூன்றில் (பொது அறிவுப் பரீட்சை தவிர) சித்தி பெற்றிருப்பதுடன் இம்மாதம் 20 ஆம் திகதி 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்கானவிண்ணப்பங்களை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாகதலைவர், அரசகரும மொழிகள் ஆணைக்குழு பாஷா மந்திரய இல-341/7, கோட்டே வீதி, ராஜகிரிய என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். (2)

# மகளிர் அபி.நிறுவனத்தில் கண்காட்சி நாளை

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரின் கண்காட்சியும் கலை நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஓ.எல்.ஆர். ஆலய வளாகத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாண மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கிராம அபிவிருத்திப் பணிப்பாளர் ஜே.ஜே. சி.பெலிசியன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.ஏ.ஜெயராஜன், யாழ். உதவிப் பிரதேச செயலர் வ.தனிஷ்கா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை றெஜி ராஜேஸ்வரன், யாழ்.நகர் மேற்கு கிராம அலுவலர் ஆர். யாதவன், யாழ் பிரதேச கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தலைவர் நா.தனேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 70 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 100 | 80 |
| தக்காளி | 40 | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 40 | 20 | 40 | 40 |
| கரட் | 100 | 80 | 80 | 100 |
| பூசணி | 50 | 30 | 40 | 40 |
| புடோல் | 50 | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 60 | 50-60 | 80 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 60 | 70 |
| பாகற்காய் | 140 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 40 | 60 |
| பயற்றங்காய் | 40 | 80 | 60 | 50 |
| லீக்ஸ் | 60 | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 40 | 30 | 50 | 50 |
| கறிமிளகாய் | 90 | 50 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 150 | 240 |
| போஞ்சி | 90 | 80 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 90 | 60 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-70 | 50 | 35 | 35-40 |
| இராசவள்ளி | 90 | 100 | 100 | 80 |

# இராசி பலன்

03.04.2014
(பங்குனி 20, வியாழக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 11.10 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 3.10. மணிவரை
இராகுகாலம் 1.40-3.10 மணிவரை
சுப நேரம் 7.40-9.10 மணி வரை
கார்த்திகை விரதம், சக்தி
கணபதி சதுர்த்தி விரதம்

**மேடம்** காலையிலேயே சுப தகவல்கள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் உருவாகும், பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்** பெருமைகள் வந்து சேர கணபதியை வழிபட வேண்டிய நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**மிதுனம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலையும் சந்தர்ப்பம் உருவாகலாம்.

**கடகம்** மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், வருமானம் திருப்தி தரும்.

**சிங்கம்** தொழிலில் புதியவர்களை இணைக்கும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழ்வீர்கள், உற்சாகமான நாள், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவாகலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், ஆன்றோர் சந்திப்புண்டு, புதிய திட்டங்கள் கைகூடும்.

**துலாம்** ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, மறதியால் ஒரு சில பணிகளை செய்யாமல் தவறவிடலாம், கூட்டாளிகளிடம் விழிப்பாக இருக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வரலாம், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், உடல் நலன் சீராகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**மகரம்** போட்டியாக செயற்பட்ட சிலர் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்** நல்ல தகவல்கள் நாடி வரலாம், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**மீனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொழிலில் எதிர்பார்த்த நல்ல திருப்பங்கள் ஏற்படலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிலுக்கு சென்று திரும்பிய மூவர் மீது வாள்வெட்டு

யாழ்.சுன்னாகம் மதவடி ஒழுங்கையிலுள்ள பூதராயர் கோவிலுக்கு அருகில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்வாள்வெட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றுள்ளதாக சுன்னாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிவில் பாதுகாப்புக்குழுவைச் சேர்ந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பூதராயர் கோவிலில் வழங்கப்பட்ட அன்னதானத்தில் கலந்து கொண்டுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த மூவரை மறைவான இடத்தில் நின்ற நபர்கள் வழிமறித்து வாள்களால் வெட்டியுள்ளனர்.

இதன்போது மதவடி ஒழுங்கையைச் சேர்ந்த 3 குடும்பஸ்தர்களும் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த மூவரும் சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வாள்வெட்டுச் சம்பவம் தனிப்பட்ட பகை காரணமாகவே இடம்பெற்றுள்ளது எனவும் வாள்வெட்டுடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களைத் தேடி வருவதாகவும் சுன்னாகப் பொலிஸார் தெரிவித்தனர். (2-4)



நன்றி:-மிரர்




## யாழ்.யோகர் சுவாமிகளின் 50 ஆவது குருபூசை


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளின் 50 ஆவது குருபூசை எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு சிறப்புச் சொற்பொழிவை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபர் பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு நிகழ்த்துவார்.

இதன்போது துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் நற்சிந்தனைப் பாடல்களும் இடம்பெறும். (2)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

இணுவில் தெற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த பராசசிங்கம் பிரதீசன் அண்மையில் சமாதான நீதவானாக மல்லாக நீதவான் நீதிமன்றத்தின் மாவட்ட நீதிபதி எஸ். சதீஸ்தரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கிளிநொச்சி கல்வி வலய கண்டாவளைக் கல்விக் கோட்டத்தில் உலக உணவுத்திட்ட மேற்பார்வையாளராக கடமையாற்றும் இவர் கிளி/திருவையாறு ம.வி முன்னாள் ஆசிரியராவார். (2)

## இரசாயனவியல் வினாவிடைப் பரீட்சை

க.பொ.த.(உ/த) மாணவர்களுக்கு வழமை போன்று இலங்கை இரசாயனவியல் கழகத்தினால் நடத்தப்படும் அகில இலங்கை இரசாயனவியல் வினா விடைப் பரீட்சை இம்முறை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலுள்ள பரீட்சை நிலையத்தில் எதிர் வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணவர்கள் அனைவரையும் தவறாது உரிய நேரத்திற்கு சமுகமளித்து பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் அறிவித்துள்ளார். (2)

# யாழ்ப்பாணத்துக்கு கடத்தப்பட்ட கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றினர்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கடல்வழியால் கடத்தப்பட்ட கேரளா கஞ்சா யாழ். பொலிஸாராலும் புலனாய்வுப் பிரிவினராலும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இக்கைப்பற்றல் சம்பவம் நேற்று முன்தினம் மாலை யாழ். நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது உரைப்பையில் சுற்றப்பட்ட நிலையில் சுமார் 3 கிலோகிராம் வரையிலான நிறையுடைய கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து இலங்கை கடற்பரப்பினூடாக பெறுமதி வாய்ந்த குறித்த கஞ்சா போதைப்பொருள் யாழ்ப்பாணத்திற்கு கடத்தப்பட்டது.

இக்கஞ்சா கடத்தல் தொடர்பில் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த இடத்திற்குச் சென்ற புலனாய்வு பிரிவினர் பொலிஸாரின் உதவியுடன் கஞ்சாவைக் கைப்பற்றியுள்ளனர்.

இக்கைப்பற்றல் நடவடிக்கையின் போது இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கைப்பற்றப்பட்ட கஞ்சா மிகவும் பெறுமதி வாய்ந்தது என்றும் குறித்த கடத்தல் சம்பவத்தின் பின்னணியில் பலர் உள்ளதாகவும் அவர்கள் தொடர்பில் புலனாய்வு விசாரணை மேற்கொண்டு வருகின்றோம் எனவும் யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இக்கைது நடவடிக்கை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்திறங்கிய இருவர் மீதே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் ஒருவர் சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் மற்றொருவர் கல்முனைப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சா வைத்திருந்த நபரை பொலிஸார் கைது செய்ததும் அவர் கடத்தப்பட்டு விட்டதாக கல்முனையைச் சேர்ந்தவர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இம்முறைப்பாட்டையடுத்து முறைப்பாடு செய்த கல்முனையைச் சேர்ந்தவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (2-4)

## வாகன விபத்தில் இருவர் படுகாயம்!

தென்மராட்சி உசன் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் மிருசுவில் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவ் விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த கூலர் ரக வாகனமும் மிருசுவிலிலிருந்து ஏ-9 வீதியால் வந்த உழவு இயந்திரமுமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்துச் சம்பவத்தில் அ.விக்னேஸ்வரன், க. செல்லத்துரை ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். (2-29)

# பயிற்சிகளை நிறைவுசெய்த பயனாளிகளுக்கு உபகரணங்கள்

## அமைச்சர் டக்ளஸ் வழங்கினார்

(மானிப்பாய்)

கைதடியில் இந்திய அரசின் நிதியுதவியுடன் கைவினை கிராமமொன்று அமையப் பெறவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலர் சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிற்சிகளை நிறைவு செய்த பயனாளிகளுக்கு தொழிற்றுறை சார்ந்த உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் பங்கேற்றபோது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

யாழ்.மாவட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் முன்னெடுகப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிற்றுறைகள் வாழ்வின் எழுச்சி திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிலையில் கைத்தொழிற்றுறை சார்ந்தோரது வாழ்வாதாரமும் மேம்பாடடைந்து வருகின்றது.

குறிப்பாக யுத்தத்தால் அழிவடைந்த அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை இந்திய மற்றும் இலங்கை அரசுகளின் நிதியுதவிகளுடன் நிர்மாணிக்கப்பட்டு விரைவில் இயங்கவுள்ள நிலையில் ஏற்கனவே யுத்த காலத்தின்போது சேதமடைந்த கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிலையமும் நவீன முறையில் மீள்புனரமைப்புச் செய்யப்பட்டு தற்போது சிறப்பாக இயங்கி வருகின்றது.

கைதடியில் கைவினை மற்றும் கைப்பணிக் கிராமமொன்று அமையப் பெறவுள்ளது. அரை ஏக்கர் நிலப்பரப்பில் அமையப்பெறவுள்ள கைப்பணிக் கிராமத்திற்காக இந்திய அரசு 25 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

பனை அபிவிருத்தி சபையைச் சேர்ந்த 60 பேரும் தேசிய வடிவமைப்பு சபையைச் சேர்ந்த 56 பேரும் தென்னை அபிவிருத்தி சபையைச் சேர்ந்த 5 பேரும் கைத்தொழில் அபிவிருத்தி சபையைச் சேர்ந்த 8 பேருமாக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் 126 பயனாளிகளுக்கு தொழிற்றுறைசார்ந்த உபகரணங்களையும் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்துள்ளார்.

இதில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், வாழ்வின் எழுச்சித்திட்டப் பணிப்பாளர் கமகே, பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (2-23)

# பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு தலைவர், உறுப்பினர்கள் நியமனம்

## நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன



வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்குப் புதிதாக தெரிவு செய்யப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்களை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உத்தியோகபூர்வமாக வழங்கினார்.

யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள பழைய பூங்கா வளாகத்தில் உள்ள வடமாகாண ஆளுநர் பணிமனையில் நேற்று நடைபெற்ற நிகழ்விலேயே மேற்படி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இதன்படி வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் கிழக்கு மாகாண பிரதம செயலாளராக இருந்த ஆர்.தியாகலிங்கம், உறுப்பினர்களாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், எஸ்.திஷநாயகே, முன்னாள் யாழ். மாவட்ட பிராந்திய ஆணையாளர் பி.தியாகராஜ், ஏ.என்.அமனுல்ல ஆகியோர் தமக்கான நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

மேற்படி நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் வடமாகாண ஆளுநருடன் வடமாகாண சபைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடமாகாண பிரதம செயலாளர் விஜயலக்சுமி, ஆளுநர் செயலாளர் இ.இளங்கோவன், பொது சேவை ஆணையாளரின் செயலாளர் தெய்வேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறை அதிகாரிகள் இருவரின் பணி திடீர் இடைநிறுத்தம்

வட்டரக்க திறந்தவெளி சிறைச்சாலை பாடசாலையில் இருந்து ஆறு கைதி மாணவர்கள் தப்பியோடிய சம்பவம் தொடர்பில் இரு சிறை அதிகாரிகள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் கூறியது.

கடந்த ஞாயிறன்று குறித்த சிறைச்சாலை பாடசாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற ஆறு மாணவர்கள் கம்பி வேலியை வெட்டி அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகக் கூறிய சிறைச்சாலை ஆணையாளர் சந்ரரத்ன பல்லேகம, தப்பியோடியவர்கள் அம்பேபுஸ்ஸ முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் எனவும் சிகிச்சைக்காக வந்த போதே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தப்பியவர்கள் இதுவரை கைது செய்யப்படாததோடு இவர்களை பிடிக்க தேடுதல் நடத்தப்பட்டு வருகிறது.

வட்டரக்க திறந்தவெளி சிறைச்சாலை பாடசாலை அண்மையில் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டது. இங்கு இளம் கைதிகளுக்கு கல்வி புகட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

அன்பு வாசகர்களே!

உங்கள் வலம்புரியில்
04.04.2014
வெள்ளிக்கிழமை முதல்
கவிப்பேரரசு
வைரமுத்து எழுதும்



இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்
வாசிக்கத் தவறாதீர்கள்

**University of Jaffna-Sri Lanka**
**Faculty of Management Studies & Commerce**

**Postgraduate Diploma in Management (PGDM)**
**Loading to the Degree in Master of Business Administration (MBA)**
**Intake-I 2014/2015**

The Faculty of Management Studies & Commerce of the University of Jaffna is Pleased to announce the commencement of the Postgraduate Diploma in Management (PGDM) for the academic year 2014/2015 and invites applications for the addmission from suitability qualified candidates. The course is offered commencing from May 2014 and will be offered in modular form. Details of the courses can be obtained from the Faculty of Management Studies & Commerce or via the internet on the Faculty website: ***http://www.jfn.ac.lk/maco.***

**ELIGIBILITY REQUIREMENTS**

1. Graduates in any discipline in any recognized University
OR
2. Professional Qualifications with five years experience
OR
3. Any other qualifications and/ or experience, which would be acceptable to the selection board with the approval of the senate.

**PROGRAMME STRUCTURE**

Structure - Semester based Course Unit System
Semester duration - Each semester estends for 20 weeks
Duration - Two years (Full time)
Medium of instruction - English

**COURSE FEE**

Total course fee would be LKR Three hundred and fifty thousand per student. This can be paid in two installments as given below:

| Detail | Year 1 (PGDM) | Year 2 (MBA) |
|---|---|---|
| Registration/ Renewal | LKR 10,000 | LKR 10,000 |
| Tuition fee | LKR 175,000 | LKR 125,000 |
| Examination fees | LKR 15,000 | LKR 15,000 |
| **Total** | **LKR 200,000** | **LKR 150,000** |

**Application Fees: LKR 2000/=**

**APPLICATION PROCEDURE**

Application form & Paying in voucher can be downloaded from the Faculty website at ***http://www.jfn.ac.lk/maco***. or obtained from **Dean, Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Thirunelveli, Jaffna.** by Sending a self addressed stamped envelope 100x 225 mm in size. **The Closing date for applications will be 30.04.2014.** Please forward complete application form to the above address and indicate **"Application for MBA"** in the top left hand corner of the envelope.

**Registrar**
**University of Jaffna, Sri Lanka.**

(C-148)

விசேட சலுகை
மானிப்பாயில்
தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு
01.04.2014 முதல்
20.04.2014 வரை
லீசிங்கிற்கும் இலவசம்
இலவசம் காஸ் குக்கர் காஸ் சிலிண்டர்



பல்சர் வகை, டிஸ்கவர் வகை,
ஆட்டோ (லீசிங்க மட்டும்)
(C-6946)
CT, பிளாட்டினா வகை
இலவசம் ரோஸ்ரர் எலக்ரிக் கேற்றில்



நாடு முழுவதும் ஒரே விலையில்! எம்மிடமும் அதே விலையில்!!
ரஞ்சிற் மோட்டோர்ஸ்
(டேவிற் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் முகவர் )
ரஞ்சிற் றிப்பயறிங் & சேவிஸ் சென்ரர்
யாழ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல. 0773107549, 077 226 9883,
021 225 5228, 021 225 6333

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 20.75 செவ் 4 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: MBBS / Dr.<br>தொ.இ: B/1181 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: 20.5 சூரி செவ் 11 இல்<br>தகைமை/தொழில்: BA /<br>முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G/1753 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா: 9 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L / தையல்<br>தொ.இ: B/1183 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 40.75 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 4'6"<br>தகைமை/தொழில்: O/L / தையல்<br>எதிர்பார்ப்பு: பெண்ணின் கணவர் இறந்துவிட்டார்<br>தொ.இ: G/1754 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 26.5<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Dip. / நிரந்தர உத்தியோகத்தர் (கனடா PR)<br>தொ.இ: B/1189 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா: 53 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1755 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 36.5 செவ் 4 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L / உணவகம் (பிரான்ஸ் PR)<br>தொ.இ: B/1190 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: 18.75 சூரி செவ் 11 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்<br>தொ.இ: G/1756 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கிளாய் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்

## வ.மா. சபை உறுப்பினர் து.ரவிகரன் உறுதியளிப்பு



(குருமன்காடு)

கொக்கிளாய் மக்களின் அழைப்பை ஏற்று சமீபத்தில் கொக்கிளாய் பகுதிக்கு சென்ற வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அம்மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளை கேட்டறிந்து கொண்டதோடு இதுகுறித்து உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் உறுதியளித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 1983 ஆம் ஆண்டு இடப்பெயர்வை தொடர்ந்து பல ஆண்டுகால நிம்மதியற்ற வாழ்விற்கு பின்னர் தற்போது மீளக்குடியேறி தாம் இன்னும் பலவித இன்னல்களை சந்தித்து வருவதாக அவரிடம் எடுத்துரைத்தனர்.

கொக்கிளாய் முகத்துவாரப்பகுதியில் முன்னைய காலத்தில் வசித்து தொழில் செய்து வந்த நிலையில் இன்று அங்கு சிங்கள குடியேற்றங்கள் திணிக்கப்பட்டு நாம் கொக்கிளாய் புளியமுனைப் பகுதியில் குடியேற்றப்பட்டோம்.

இந்நிலையில் தற்போது இருக்கும் இடத்திலிருந்து (கொக்கிளாய் புளியமுனை பகுதி) ஒரு கிலோ மீற்றர் பாதையில் 800 மீற்றர் தூரத்திற்குரிய பாதை இன்னமும் போடப்படவில்லை. ஆதலால் 200 மீற்றர் தூரத்தின் பின்னர் உள்ள நீர்ப்பரப்பினை (வில்லுக்குளம்) குல்லாவின் உதவி கொண்டே கடக்க வேண்டியுள்ளது.

இதேவேளை 10 பேருக்கு பாசிக் நிறுவனத்தின் மூலம் 50 சதவீத மானியத்துடன் தரப்பட்ட படகு, எஞ்சின் ஆகியவற்றுக்கான மிகுதி கடனை செலுத்தும்படி அந்நிறுவனமும் நெருக்குவதாக தெரிவித்தனர்.

50 வீத கடனில் பெறப்பட்ட படகு, எஞ்சினுடன் மேலும் கடன்பட்டு வலைகளை எடுத்து தொழில் செய்ய இருக்கும் நிலையில் இன்னமும் அதற்கான பாதை செப்பனிடப்படாததால் அங்கு தொழில் செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் செப்பனிடப்படாத பகுதிகளை ரவிகரன் பார்வையிட்டார். (250)

# கரைச்சி பிரதேச செயலக அபிவிருத்தி குழுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக அபிவிருத்திக் குழுவின் மீளாய்வுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் இடம்பெறுகிறது.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள அமைப்புக்கள் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வழங்கலாம் என கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (254)

# இன ஒற்றுமைக்கான தமிழ், சிங்கள புத்தாண்டு நிகழ்வு

## மன்னாரில் ஏற்பாடு

(குருமன்காடு)

மன்னார் மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், மாவட்ட அரச திணைக்களங்கள் மற்றும் முப்படையினரும் இணைந்து மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை மன்னார் முருங்கன் மகா வித்தியாலய பாடசாலை மைதானத்தில் தமிழ், சிங்கள புத்தாண்டு தினத்தை கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

மேற்படி நிகழ்வுக்கான முன்னோடி கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல், உதவி மாவட்ட செயலர் எம்.பரமதாசன், பிரதேச செயலர்கள், இராணுவம், பொலிஸ், கடற்படை அதிகாரிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய கருத்து தெரிவிக்கையில்,

மேற்படி நாம் ஏற்பாடு செய்துள்ள இந்த தமிழ், சிங்கள புத்தாண்டு நிகழ்வுகள் எமது இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை வலுப்படுத்தும் வகையில் முழுமையானதாக இடம்பெறச் செய்ய வேண்டும் என்பதுடன் இதற்கு அனைத்து அதிகாரிகளும் தமது ஒத்துழைப்பை வழங்கவும் வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் சிறியவர் கள் முதல் அனைவருக்கும் ஏற்ற வகையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (250)

# துணுக்காய் பிரதேச வீதிகளில் மின்விளக்குகள் இல்லை

(மல்லாவி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள துணுக்காய் பிரதேச சபையின் பிரதான இடங்களில் குறிப்பாக மல்லாவி நகரப் பகுதி உட்பட மல்லாவி மத்திய கல்லூரி பகுதி, துணுக்காய் நகரப் பகுதி என்பன அடங்கலான பல்வேறு இடங்களிலும் தெரு விளக்குகள் பொருத்தப்படாமையினால் மக்கள் மிகுந்த சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அத்தோடு மக்கள் இரவு நேரங்களில் வீதிகளில் அச்சத்துடன் பயணிக்கின்றனர். தெரு விளக்குகள் பொருத்துவதற்காக துணுக்காய் பிரதேச செயலர் எஸ்.குணபாலசிங்கம் துணுக்காய் பிரதேச சபையிடம் 4 இலட்சம் ரூபா வழங்கியும் இதுவரையும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாந்தை கிழக்குப் பிரதேச சபையினரால் அண்மையில் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (9-15)

# கள்ளநோட்டுக்களுடன் தொடர்புடைய இராணுவ வீரர் மீது விசாரணை

## இராணுவத் தளபதி உத்தரவு

27 இலட்சம் பெறுமதியான 5 ஆயிரம் ரூபா கள்ளநோட்டுக்களுடன் கேகாலை பல்லேகம பகுதியில் இராணுவ வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பரகல இராணுவ முகாமில் கடமையாற்றும் இவரது கேகாலை வீட்டை சோதனையிட்டபோது 520 ஐயாயிரம் ரூபா நோட்டுக்களும், 10 ஆயிரம் ரூபா நோட்டுக்களும், பிரிண்டர் ஒன்றும், மடிக்கணனி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ள ாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

ஐயாயிரம் 'ரூபா நோட்டுக்களில் Qp/21 392082 என்ற இலக்க ம் ஆயிரம் ரூபா போலி நோட்டுக்களில் p/37 686138 என்ற தொடர் இலக்கமும் பொறிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொடர் இலக்கங்கள் கொண்ட 5 ஆயிரம் ரூபா, ஆயிரம் ரூபா நோட்டுக்கள் கிடைத்தாலோ அல்லது எவராவது வைத்திருந் தாலோ அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் தரும்படி பொலிஸார் பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை,போலி நாணயத்தாள் மோசடி தொடர்பில் விசாரணை நடத்துமாறு இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரட்நாயக்க உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி போலி நாணயத்தாள் மோசடியில் ஈடுபட்ட இராணுவ உத்தியோகத்தர் தொடர்பில் முழு அளவில் விசாரணை நடத்துமாறு இராணுவத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இராணுவத்தில் இணைந்து கொண்ட இளைஞர்களுக்கு இராணுவ ஒழுக்கம் பற்றிய போதிய தெளிவு கிடையாது.

இவ்வாறான சில இளைஞர்களின் நடவடிக்கைகள் ஒட்டு மொத்த இராணுவத்திற்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எவ்வித மன்னிப்பும் வழங்கப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# வலயக் கல்வி அலுவலக கட்டடம் பயன்படுத்த முடியாத நிலையில்

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலக கட்டடத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதால் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றுமாறு வடமாகாண கல்வித் திணைக்களத்திடம் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகம் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் குறைந்த மூல வளங்களை கொண்டு கடற்கரைக்கு சமாந்தரமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் அலுவலக கட்டடத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஒவ்வொரு நாளும் முற்பகல் 11 மணியிலிருந்து அலுவலகத்திற்குள் ஒரு வகையான உஷ்ணம் ஏற்படுவதாகவும் இதனால் அலுவலகத்தில் இருந்து கடமைகளை நிறைவேற்ற முடியவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, இது தொடர்பான அதிகாரிகள் இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வடமாகாண கல்வித் திணைக்களத்திடம் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (250)

# நேபாளக்குழு யாழ். விஜயம்

இலங்கைக்கு வந்துள்ள நேபாளக்குழு இன்று காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

நேபாள நாட்டின் சமாதானத்திற்கும் மீள் கட்டுமானத்திற்குமான 9 பேர் அடங்கிய இந்தக் குழுவினர் இன்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளதோடு முற்பகல் 10 மணியளவில் ஆளுநர் அலுவலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி உள்ளிட்ட பலரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். (2-6)

# 'தேவைப்படுகிறார்' யாழில் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் பொலிஸாரினாலும் பயங்கரவாதக்குற்றத்தடுப்பு பிரிவினராலும் பலர் தேடப்பட்டு வரும் நிலையில் ***தேவைப்படுகிறார்*** என்று தலைப்பிடப்பட்ட மேலும் ஒரு சுவரொட்டி யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளது.

அதன்படி நல்லூர், நெல்லியடி , அளவெட்டி போன்ற பகுதிகளில் அதிகளவில் இந்த சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதிகளவிலான குற்றங்களுடன் தொடர்புடைய தெய்வீகன் அல்லது பகீரதன் என்று அழைக்கப்படுபவர் தேவைப்படுகின்றார் என அந்த சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் குறித்த நபர் தொடர்பில் சரியான தகவல்களை வழங்குபவர்களுக்கு 5 இலட்சம் ரூபா பெற்றுத் தருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் தகவல்களை வழங்குவதற்கும் தொலைபேசி இலக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. எனினும் இவ்வாறு தேவைப்படுகின்றார் என தொடர்ந்தும் பலரின் பெயர்கள் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை, அண்மையில் கோபி மற்றும் அவரது சகாக்கள் தொடர்பில் தகவல் தருபவர்களுக்கு 10 இலட்சம் ரூபா தருவதாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவுதியின் பிரேத அறைகளில் இலங்கையர்களின் 20 சடலங்கள்

சவுதி அரேபியாவின் பிரேத அறைகளில், இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படாத மேலும் 20 சடலங்கள் காணப்படுவதாக, அரப் நியூஸ் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஒக்டோபர் மாதம் வரையான காலப் பகுதிக்குள் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து 30 வயதிற்குக் குறைவான 75 வீத பெண்களின் சடலங்கள் இலங்கை க்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறித்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த காலப்பகுதிக்குள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புக்களுக்காக சென்று உயிரிழந்த இலங்கைப் பெண்கள் குறித்து, அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் இலங்கை வர்த்தக சங்கம் அதிக கவனம் செலுத்தி யுள்ளது.

இந்த உயிரிழப்புக்களில் அதிக ளவானவை மாரடைப்பினால் ஏற்பட்ட மரணம் என கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வைத்திய அதிகாரியை மேற்கோள் காட்டி அரப் நியூஸ் இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது. அத்துடன், அவ்வாறு அனுப்பி வைக்கப்படுகின்ற சடலங்களில் பெரும்பாலானவற்றில் உள்ளக அவயவங்கள் காணாமற் போயுள்ள தாக அதில் சுட்டிக்காட்டப்பட்டு ள்ளது.

நாளொன்றுக்கு நாட்டிற்கு வெளியே வாழ்ந்து வருகின்ற ஒரு இலங் கையர் வீதம் உயிரிழப்பதாக ரியாத் நகரிலுள்ள இலங்கை தூது வராலயத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி அச்சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

உயிரிழக்கும் இருவரின் சடலங்களை உறவினர்களுக்கு வழாங் குவதற்காக, நாளாந்தம் கொழும் பிற்கு அனுப்பிவைக்கப்படுவதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.(2)

# வில்பத்து வீடமைப்புத் திட்டத்திற்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும்

## அத்தே ஞானசார தேரர் கூறுகின்றார்

(கொழும்பு)

இலங்கையை எந்த பூதங்கள் ஆட்சி செய்கின்றது என்பது புரியவில்லை என பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கிருளப்பனையில் உள்ள பொதுபலசேனா அமைப்பின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு சுற்றாடல் ரீதியாகவும், தொல்பொருள் ரீதியாகவும் பாதுகாப்பு தொடர்பில் முக்கியமான பகுதியாக இருக்கும் வில்பத்து வனத்தை அழித்து மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டத்தை நிறுத்த ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தின் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் ஒரு வாரத்திற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்படி நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் பொதுபல சேனா அந்த பிரதேசத்திற்கு செல்ல நேரிடும்.

இந்த விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் எவ்வித மான பதிலும் வழங்கப்படவில்லை.

இந்த நாட்டை எந்த பூதங்கள் ஆட்சி செய்கின்றன என்பது புரியவில்லை. அமைச்சர்கள் தாம் விரும்பியவாறு செயற்படுகின்றனர். நாங்கள் அரசாங்கத்தை காப்பதற்காக செயற்படவில்லை.

முதலில் எமது நாட்டை பற்றி சிந்திக்க வேண்டும். எமது உரிமைகளை கொள்ளையிட முஸ்லிம்களுக்கு அதிகாரத்தை கொடுத்தது யார்?

விடுதலைப் புலிகள் கூட வில்பத்து வனத்திற்கு இவ்வாறான அநியாயத்தை செய்ய வில்லை. அதனைவிட பல நூறாயிரம் மடங்கு அழிவை மேற்கொண்டு வில்பத்து வனத்தை அழித்து வருகின்றனர்.

கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தில் அம்பாறையில் புராதன விகாரை ஒன்றை புனரமைப்பதற்கான அடிக்கல்லை நாட்ட முஸ்லிம் அடிப்படைவாதிகள் இடமளிக்கவில்லை.

சிங்களவர்களின் முதுகெலும்பை முறிப்பதற்கு மட்டுமா நிறைவேற்று அதிகாரம் இருக்கின்றது என ஞானசார தேரர் கேள்வி எழுப்பியுள்ளார். (2)

# பௌத்த மதத்தை பாதுகாப்போம்

## ஜனாதிபதி அழைப்பு

பௌத்த மதத்தை எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாத்துக் கொடுக்க வேண்டியது எமது கட மையாகும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங் கேற்ற போது அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகை யில், இன்று பௌத்த மத வழி பாடுகளை சுதந்திரமாக மேற்கொ ள்ளக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

பௌத்த விஹாரைகள் வரலாற் றுச் சிறப்பு மிக்கவை. அவற்றை பாதுகாக்க வேண்டியது எமது கட மையாகும்.

எதிர்கால சந்ததியினர் பௌத்த மதத்தை பின்பற்ற தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துங்கள்

## மின்சாரசபை கோரிக்கை

நீர் மின் உற்பத்தி வெகுவாக குறைவடைந்துள்ள போதும் எக்காரணம் கொண்டும் மின்சாரம் துண்டிக்கப்படாது என மின்சார சபை தெரிவித்தது.

தடையின்றி பாவனையாளர்களுக்கு தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படும் என்று தெரிவித்த மின்சார சபை பிரதி பொது முகாமையாளரும் மின்சார சபை பேச்சாளருமான செனஜித் தசநாயக்க மக்கள் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

நீரேந்து பகுதிகள் சில மாதங்களாக மழைவீழ்ச்சி குறைந்துள்ளதால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் பெருமளவு குறைவடைந்துள்ளன. இந்த நிலையில் நீர் மின் உற்பத்தி 15 வீதமாக குறைந்துள்ளதாக கூறிய அவர், எரிபொருள் மூலமே கூடுதலாக மின் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அதனால் மின்சார சபைக்கு அதிகம் செலவிடப்படுவதாகவும் தெரிவித்தார். வரட்சியான காலநிலை ஏற்பட்டுள்ள போதும் தடையின்றி மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாக கூறிய அவர், விரைவில் நுரைச்சோலை இரண்டாம் கட்டத்தினூடாக மின் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட பின் எரிபொருள் செலவு குறைவடையும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைந்துள்ளமையால் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு இலங்கை மின்சார சபை பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணிவரையிலான காலப்பகுதியிலேயே மக்கள் அதிகமாக மின்சாரத்தை பயன்படுத்துவதால் இந்த மூன்று மணித்தியாலங்களுக்கு முடிந்தவரை பாவனையை குறைத்துக்கொள்ளுமாறும கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (2)

# காங்கேசன்துறை கடலில் வைத்து தமிழக மீனவர்கள் 58 பேர் விடுதலை

விடுதலை செய்யப்பட்ட இலங்கை, தமிழக மீனவர்கள் பரிமாற்றமொன்று நேற்று முன்தினம் காலை, 11 மணியளவில் இலங்கை இந்திய கடல் எல்லையில் காங்கேசன்துறை கடற்பரப்பில் நடைபெற்றுள்ளது.

தமிழக மீனவர்கள் 58 பேர் அவர்களது 10 வள்ளங்களுடன் நேற்று முன்தினம் தமிழக கரை யோர பாதுகாப்பு பிரிவினரிடம் கையளிக்கப்பட்டனர்.

இதேபோன்று இந்தியாவில் கைதான இலங்கை மீனவர்கள் 17 பேர் அவர்களது 10 வள்ளங்களுடன் தமிழக கரையோரப் பாதுகாப்பு பிரிவினரால் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கடற்படையின் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுல சூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கச்சதீவுக்கு அருகே இலங்கை கடற்படையினர் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் நோக்குடன் தமிழக மீனவர்களுக்கு இனிப்பு கொடுத்ததாக வெளிவந்த செய்திகளில் எதுவித உண்மையுமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்தும இலங்கை கடற்படையினர் தாக்குவதாக கூறி வருகின்றனர்.

இதில் எவ்வித உண்மையுமில்லை என்றும் அவர் தெரிவித்தார். (2)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் 2014 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எல்லைக்குட்பட்ட கோழி இறைச்சிக் கடைகள் மீள் கேள்வி வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 03.04.2014-08.04.2014 பி.ப. 1.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி: 09.04.2014 பி.ப. 12.00 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி: 09.04.2014 பி.ப. 02.00 மணிவரை

| கோழி இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் NBT தவிர | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை NBT தவிர | மாத வாடகை NBT தவிர |
|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டின உப அலுவலகம்<br>மானிப்பாய் பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 309375.00 | 400.00 |
| பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்<br>மாதகல் கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 15000.00 | 250.00 |

கேள்வி விண்ணப்பப்படிவத்தினை உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு. சண்முகம் சிவகுமாரன்,**
**பதில் தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(சி-6950)



## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவ்வ நிலையங்களிலும் 31.03.2013 வரையும் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் 22.04.2014 இலிருந்து காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | -- |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி<br>கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-6949)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ராமுவின் ஆசை

லட்சுமிபுரம் என்ற குக்கிராமத்தில் வசித்து வந்த ராமு மிகவும் கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தான்.

தினசரி கூலி வேலை செய்து அதில் கிடைக்கும் சொற்ப வருமானத்தை வைத்து காலம் கழிப்பது மிகவும் கடினமாக இருந்தது.


அவனுடைய மனைவி அவனிடம் பட்டணத்திற்குச் செல்லுமாறு பலமுறை கூறியும் அவனுக்கு அதில் விருப்பமில்லை.

ஓரிரவு உறக்கத்தில் வடை சாப்பிடுவதுபோல் கனவு கண்ட ராமு, மறுநாள் அதைப் பற்றித் தன் மனைவியிடம் சொன்னான்.

அதற்கு அவள், "குடிப்பதற்கு கஞ்சிக்குக்கூட வக்கில்லை. இதில் வடை சாப்பிடும் ஆசை தேவைதானா?" என்று இளக்காரமாகக் கேட்டாள்.

தொடர்ந்து, "எத்தனை நாட்களாக உங்களைப் பட்டணம் சென்று சம்பாதிக்கச் சொல்லி கொண்டு இருக்கிறேன்! கேட்கிறீர்களா? இங்கு இவ்வாறு உட்கார்ந்து இருந்தால், நாம் வாழ்நாளெல்லாம் வேதனைப்படவேண்டியதுதான்!" என்று மிகவும அலுத்துக் கொண்டாள்.

பிறந்ததிலிருந்து தன் கிராமத்தை விட்டு வெளியே சென்றறியாத ராமுவிற்கு முன்பின் தெரியாத பட்டணம் செல்வது இனமறியாத பயத்தை உண்டாக்கியது.



"சரிசரி! வாங்க, வந்து கஞ்சியைக் குடித்து விட்டுப்போங்க!" என்று அவன் மனைவி அழைக்க, அவன் கஞ்சிக் கலயத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தான்.


அப்போது, பக்கத்து வீட்டுக் குழந்தை தள்ளாடித் தள்ளாடி அவர்களுடைய வீட்டிற்குள் மெல்ல நுழைந்தது.

அவ்வாறு அது நடந்து வரும்போது, அதனுடைய கால் பட்டு இடறி, கஞ்சிக் கலயம் கவிழ்ந்து, கஞ்சி தரையில் கொட்டியது. அன்று முழுப்பட்டினியுடன் ராமு கூலி வேலை தேடிச் சென்றான்.

கிராமத்து கணக்குப்பிள்ளை வீட்டை அடைந்து அவரிடம் ஏதாவது வேலை இருக்கிறதா என்று கேட்டான்.

அப்போது அவர் வீட்டிலிருந்து வடை சுடும் வாசனை வீசியது. "இன்று எங்கள் வீட்டில் என் தந்தைக்கு சிரார்த்தம் நடக்கிறது. நீ கிணற்றிலிருந்து நீர் இரைத்துத் தொட்டியை நிரப்பு!" என்று வேலை கொடுத்தார். ராமு மிக உற்சாகமாக வேலையில் இறங்கினான்.

வேலை செய்து முடித்தவுடன், கணக்குப்பிள்ளையின்மனைவி அவனுக்குக் கூலி கொடுத்தாள்.



ஆனால் கூலியுடன் வடையையும் எதிர்பார்த்த ராமு வெட்கத்தை விட்டு, "அம்மா! எனக்கு இரண்டு வடை கொடுங்களேன்!" எனறு கெஞ்சினான்.

"வடையா? எனககே வடை கிடைக்கவில்லை! போய்வா!" என்று அவள அனுப்பி விட்டாள்.

ஏமாற்றத்துடன் ராமுசெட்டியார்கடையை நோக்கி நடந்தான்.

அவனைக் கண்டதும் செட்டியார் உற்சாகத்துடன், "வா ராமு! எங்கள் வீட்டில் 'வடை சுடப் போகிறார்கள்! இருந்து, சாப்பிட்டுப் போ! அதுவரையில், அரிசி மூட்டைகளை எடுத்து வை!" என்றார்.

உடனே ராமு உற்சாகத்துடன் வேலை செய்ய ஆரம்பித்தான்.

அப்போது, செட்டியார் வீட்டுப் பையன ஓடி வந்து, வடைசுடும் போது அம்மாவின் கையில் கொதிக்கும் எண்ணெய் கொட்டி விட்டது!" என்று கூற, செட்டியார் கடையை மூடி விட்டு விரைந்து சென்றுவிட்டார்.

போகுமுன், அவனுக்குக் கூலியாக சிறிது அரிசிக் குருணை தந்து விட்டுச் சென்றார்.

தன் அதிர்ஷ்டத்தை நொந்து கொண்டே, ராமு வீட்டை அடைந்தான். அவன் மனைவி அவனை அன்புடன் அழைத்து, "இதோபாருங்க! நீங்க கண்ட கனவு பலிக்கப் போகிறது! இந்தாருங்கள், வடை சாப்பிடுங்கள்!" என்று ஆறு வடைகளை அவன் முன் வைத்தாள். மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்த ராமு "ஆகா! பிரமாதம்! வடை யார் கொடுத்தார்கள்?" என்று கேட்டான்.

"பக்கத்து வீட்டுக் குழந்தைக்கு இன்று ஆண்டு நிறைவு கொண்டாடினார்கள். அவர்கள் நமக்கும் கொடுத்து இருக்கிறார்கள்!" என்றாள்.

மகிழ்ச்சியுடன் வடையை சாப்பிட முனைந்தவன் ஏதோ நினைவிற்கு வந்தவனாக, "நீயும், குழந்தைகளும் சாப்பிட்டீர்களா?" என்று கேட்க, "உங்களுக்கு வடை என்றால் ஆசை என்பதால் நாங்கள் யாரும் தின்னவில்லை. எல்லாம் உங்களுக்குத் தான்!" என்றாள் அவன் மனைவி.

அதைக் கேட்ட ராமு நெகிழ்ந்து போய், "நீங்கள் சாப்பிடவில்லைஎன்றால் எனக்கும் வேண்டாம்! சாப்பிடுவதானால் எல்லாரும் பகிர்ந்து கொள்வோம்!" என்றான்.

அப்போது, பக்கத்து வீட்டுக் குழந்தை மீண்டும் தளர்நடை போட்டு அவர்கள் வீட்டிற்குள் நுழைந்தது. குழந்தையை அன்புடன் அணைத்துக் கொண்டான். ராமு, திடீரென அவனுக்குள் ஒரு சிந்தனை உதித்தது.

ஹ...இந்தப் பச்சிளம் குழந்தை நடக்கப் பயின்றவுடன் வீட்டில் கால் தரிக்காமல் வெளியேறி நம் வீட்டிற்குள் அடிக்கடி நுழைகிறது.

ஆனால், நான் பட்டிக்காட்டை விட்டு வேலை தேடிப் பட்டணம் செல்ல பயப்படுகிறேன். என் குழந்தைகள் நன்கு வயிறார சாப்பிடவேண்டுமானால், இங்கேயே முடங்கிக் கிடந்தால் நடக்காது" என்று எண்ணிய ராமு, தன் மனைவியை நோக்கி, "நான் பட்டணம் சென்று வேலை செய்யத் தீர்மானித்து விட்டேன்.

நன்கு சம்பாதித்து, உங்களுக்குப் பசிதீர உணவளிப்பேன்!" என்றான் ராமு.

இதைக் கேட்ட அவனது மனைவி மிகவும் மகிழ்ச்சியுடன் கடவுளுக்கு நன்றி கூறினாள்.

04.2014
03

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டுப் படைகள் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைநகர் ரிச்மண்ட் நகரைக் கைப்பற்றினர்.
- 1917 - வெளிநாட்டில் தஞ்சமடைந்திருந்த விளாடிமிர் லெனின் ரஷ்யா திரும்பினார்.
- 1922 - ஜோசப் ஸ்டாலின் சோவியத் ஒன்றியப் பொதுவுடைமைக் கட்சியின் முதற் பொதுச் செயலாளரானார்.
- 1933 - நாசி ஜேர்மனியில் யூதர்களின் வணிக நிறுவனங்களைப் புறக்கணிக்கும் நடவடிக்கை வெற்றி பெறவில்லை.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: பட்டான் தீபகற்பத்தில் ஜப்பானியப் படையினர் அமெரிக்க மற்றும் பிலிப்பீன்ஸ் படையினர் மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1948 - தென் கொரியாவில் ஜேஜு" என்ற இடத்தில் மனித உரிமை மீறல் மற்றும் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது.
- 1958 - பிடெல் காஸ்ட்ரோவின் புரட்சி இராணுவம் ஹவானா மீது தாக்குதல் தொடுத்தது.
- 1966- சோவியத்தின் லூனா 10 விண்கலம் சந்திரனின் சுற்றுவட்டத்தை அடைந்தது. பூமியை விட வேறொரு விண் பொருளைச் சுற்ற ஆரம்பித்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1973 - உலகின் முதலாவது நகர்பேசி அழைப்பு நியூயோர்க் நகரில் மேற்கொள்ளப்பட்டது.
- 1975 - பொபி ஃபிஷர் அனதோலி கார்ப்பொவ்வுடன் சதுரங்கப் போட்டியில் பங்குபற்ற மறுத்ததால் கார்ப்பொவ் உலக வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டார்.
- 1982 - போக்லாந்து தீவுகளை ஆர்ஜெண்டீனாவிடம் இருந்து மீளப்பெறும் முகமாக பிரித்தானியா தனது கடற்படையை அங்கு அனுப்பியது.

### பிறப்புகள்

- 1924 - மார்லன் பிராண்டோ, ஹாலிவுட் திரைப்பட நடிகர்
- 1934 - டேம் ஜேன் குட்டால், சிம்பன்சியைப் பற்றி ஆராய்ந்த ஆங்கிலேயப் பெண்
- 1955 - ஹரிகரன், இந்தியத் திரைப்பட மற்றும் கசல் பாடகர்

### இறப்புகள்

- 1680 - சிவாஜி, மராட்டியப் பேரரசர் (பி. 1630)
- [illegible] நோபல் பரிசு பெற்ற [illegible] (பி. 1853)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....குகைக்குள் நல்ல காற்றோட்டம் இருக்கிறது. காற்று வரும் வழிதான் புலப்படவில்லை. வரும் வழி இருட்டாக இருந்தாலும் வந்த பிறகு விளக்கொளியில் நல்ல வெளிச்சம்.

இப்பொழுது வந்த மூன்று கட்டங்களைப் போன்று இன்னும் பதினைந்து கட்டங்கள் இருக்கின்றதாம். குகைக்குள் இருக்கும் மொத்தம் பதினெட்டு கட்டங்களைக் கடந்து சென்றால் பதினெட்டாவது நிலையில் காலாங்கி நாதரால் உருவாக்கி வைத்துள்ள நூற்றியெட்டு மாற்றுடைய சொர்ண லிங்கம் ஒன்று இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் இந்த மீதி வழிகள் மிகு அபாயகரமானதாக இருந்ததால் அதனை சித்தர்களே மூடிவிட்டனராம்.

முன்பெல்லாம் உள்ளே செல்வதற்கு ஒரு வழியும் வெளியே வருவதற்கு ஒரு வழியுமாக இரு வழிகள் இருந்ததாம். மனிதர் நடமாட்டம் ஏற்பட்டதால் சித்தர்கள் அந்த மற்றொரு வழியை அடைத்து விட்டனராம்.

சாதாரண மானிடர்கள் சொர்ண லிங்கத்தைத் தரிசித்துவிடக்கூடாது என்பதற்காக குகையின் எல்லா வாயில்களையும் அடைத்து விட்ட சித்தர்கள், தங்கள் அருள்பெற்றவர்களால் வணங்கப்படுவதற்கு இந்த மூன்று நிலைகளை மட்டும் திறந்து வைத்தனராம்.

இந்தத் தவசிக் குகையில் ஒவ்வொரு அமாவாசைக்கும் சித்தர்கள் சூட்சுமமாக வந்து சொர்ணலிங்கத்தை வணங்கிச் செல்வதாகக் கூறுகின்றனர்.

சாதாரணமாக மற்ற நாட்களில் இந்த குகைக்குள் கரடிகள் வந்து போனாலும் அமாவாசையன்று மட்டும் இதற்குள் இருப்பதில்லையாம். அமாவாசையன்று முதலில் உள்ளே நுழையும் பக்

கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே தக்க துணை மற்றும் வழிகாட்டி இல்லாமல் இதற்குள் நுழைவது ஆபத்தான விடயம்.

உள்ளேயிருந்து வந்த மாதிரியே வெளியே



தவசிப்பாறை சிவலிங்கம்

தர் மிகுந்த ஜாக்கிரதையுடன் நுழைய வேண்டும். முதல் நாளிரவு கரடி தங்கியிருந்தாலும் அது வெளியேறுவதற்கு வேறு வழிகள் இல்லை என்பதையும்

திரும்புகிறோம். முதலில் வந்த உமா தான் கடைசியாக வெளியேறி வருகிறார்.

பெரியதொரு சாகசச் செயலைச் செய்துவிட்டு வந்த திருப்தியும் அரிய தரிசனம் கண்ட பூரிப்பும் எல்லோர் முகத்திலும் தெரிந்தது.

**கல்குண்டு மலைகள்**

தபசு பாறையின் மேல் கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைத்தது போல் ஒன்பது பெரிய மலைகள்

## ஆன்மீகம் 81

காணப்படுகின்றன.

காலாங்கி நாதர் குகையிலிருந்து தெற்கு முகமாய்க் கூப்பிடு தூரத்தில் இருக்கும் தபசுக்குகைக்கு வடபக்கம் கல்குண்டு மலைகள். இருக்கிறது என்று மலைவாடகம் வழிகாட்டுவதால் அந்தக் கல்குண்டு மலைகள் இதுவாகத்தான் இருக்க முடியும் என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. தபசுக் குகைக்கு வந்த வழியே கீழிறங்கிச் சென்று பக்கவாட்டிலிருந்து மேலேறத் தொடங்கினோம்.

தபசு பாறை மேலிருக்கும் இக் கற்களை கல்குண்டு மலைகள் என மலைவாகடம் கூறினாலும் இவைகள் சித்தர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நவக்கிரக கற்கள் என தல புராணம் குறிப்பிடுகிறது.

தபசி பாறைக்கு மேலே சதுர மற்றும் செவ்வக வடிவில் இருக்கும் இந்த ஒன்பது நவக்கிரகக் கற்களை அடைந்த போது அட்டகாசமான காற்று எங்களை அசர வைத்தது. இந்தக் காற்றினையும் மீறி இங்கு கற்பூரம் ஏற்றி வணங்கிய நாங்கள் அந்த நவக்கிரகங்களை வலம் வரத் தொடங்கினோம்.

*(தொடரும்)*

டாக்டர். சி. எஸ். முருகேசன்,
எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்

93

...கோமா நோய்வந்து பிழைத்த முதல்வர்.

இந்திரா அம்மையார் தம்மை பதவி இறக்கம் செய்தபோதும், சஞ்சய் காந்தியின் அகால மரணத்துக்கு, துக்கம் விசாரிக்கச் சென்றார். அரசியல் வேறு, மனிதப் பண்பு, நட்பு வேறு என நிரூபித்ததில் முதல்வர்.

மேடை ஏறாமல், மைக் பிடிக்காமல், மக்களோடு உறவாடுகிறேன் என்று சொல்லி, நடிப்புக்கு வணக்கம் சொல்லாமல் ஆயிரமாயிரம் மைல் தூரம் இருந்தே பதவியைப் பெற்ற முதல்வர்.

மும்முறை தேர்தலிலும் முதல்வரான முதல்வர்.

மறுபிறவி என்றும் மூன்றாம் பிறவி என்றும் செத்துப் பிழைத்த முதல்வர்.

மௌனக் கட்டளையிட்டு, அமைச்சர்களை இயங்க வைத்து நாடாண்ட முதல்வர்.

ஒரு முதல்வர் இறந்த இரங்கலுக்கு நாட்டின் பிரதமரும், தலைவரும் வந்து மரியாதை செய்தார்கள். அதிலும் முதல்வர்.

ஒரு முதல்வர் மறைவுக்காக நாடு முழுவதும் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப் பட்டதில் முதல்வர்.

எல்லா முதல்வர்களும் கோட்டையில் பதவி ஏற்றால் இவர் மௌண்ட் ரோடு நாற்சந்தியிலேயே மேடை போட்டு மக்கள் பார்த்து வாழ்த்துக் கூற பதவிபெற்ற முதல்வர்.

மறைந்த பின் பாரத ரத்னா பட்டம்

கண்டவரைக் கட்டிப்போடும் வசீகரத்திற்கு சொந்தக்காரர்......


பூக்களை ஏந்திப் போகும் புன்னகைக்கு சொந்தக்காரர்.....

கேளாமல் அள்ளித்தரும் பொற்கரங்களுக்கு சொந்தக்காரர்.....

மக்கள் மனங்களை கட்டி ஆளும் மகுடத்திற்கு சொந்தக்காரர்.....

என்றும் மாறாதிருக்கும் மங்காப் புகழுக்கு சொந்தக்காரர்.....

அன்றும் இன்றும் என்றுமே மக்கள் திலகம்......



பெற்ற முதல்வர்.

ஏசு. டால்ஸ்டாய், லெனின், கென்

னடி, மகாத்மா இவர்களுக்கு எழுதப்பட்ட எண்ணற்ற புத்தகங்களை விட அதிகமாக (426) ஆங்கிலம், தமிழ் புத்தகங்கள் வெளி வந்ததில் இவரே முதல்வர்.



ஒரு நடிகருக்கு ரசிகர்கள் தோன்றுவார்கள். அவரது மார்க்கெட் சரிந்ததும் அவர்கள் போன இடம் தெரியாது. செம்மல் மறைந்ததும் அத்தனை ரசிகர்களும் பக்தர்களாக மாறி விழாக்கள் நடத்தப்பட்டுவதில் முதல்வர்!

**வாழ்க நீ எம்மான்**

1947 இல் மகாத்மா சூடுபட்டு இறந்ததற்கு உலகத் தலைவர்கள் எல்லோரும் இரங்கல் தந்தி கொடுத்து இருந்தார்கள். அவர்களில் எல்லோர் மனதையும் தொட்டது ஜார்ஜ் பெர்னாட்ஷா கொடுத்த தந்தி... மிகவும் நல்வராக இருப்பது மிகவும் ஆபத்து என்று பொருள்.

இறைவன் சாதாரண மனிதர்களைப் படைக்க நாற்பது நாள் ஆகிறது. மகான்களை, தீர்க்கதரிசிகளைப் படைக்க நானூறு வருடங்களை எடுத்துக் கொள்ளுகிறான். இது ரிக் வேதத்தில் உள்ள சுலோகம். அந்த ரீதியில் பார்த்தால் இந்த மனித சமுதாயம் செம்மலைப் போல் ஒருவரைப் பார்க்க இன்னும் நானூறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளின் உளநலன் பேணுதலில் பெற்றோரின் பங்களிப்பு



**அறிமுகம்**

குழந்தையானது தாயின் வயிற்றில் கருக்கொண்டதுமுதல் ஐந்து வயது வரையுள்ள காலத்தையே ஆரம்பப்பிள்ளைப் பருவம் என்கின்றோம். இப்பருவத்தில் பிள்ளைகளுக்கு மகிழ்வான சூழலை உருவாக்குவதும் அப்பிள்ளையின் உடல், உளஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவதும் கற்றலிற்கான அனுபவங்களை பெற வாய்ப்புக்களை ஏற்படுத்துவதும் பெற்றோர்களதும் முன்பள்ளி ஆசிரியர்களதும் கடமையாகும். மனித மூளையின் முக்கிய வளர்ச்சிப்பருவம் இக்காலத்திலேயே ஏற்படுகின்றது. இக்காலத்தில் உடல ஆரோக்கியம், உள ஆரோக்கியம், சமூகவிருத்தி என்பனவும் ஏற்படும். இதனால் இக்காலத்தில் பிள்ளையின் உளநலனில் அக்கறை செலுத்த வேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமும் தனித்தனித்திறன்களும் திறமைகளும் உடையவர்கள். இவர்களின் திறமைகளை இனங் காண்பதும் உளநலக் குறைகளைக் கண்டுபிடிக்க வேண்டியதும் பெற்றோரின் முக்கிய கடமையாகும். பிள்ளையின் உடல்நலன், உளநலன் என்பன அப்பிள்ளையின் கற்றல் செயற்பாடுகளுக்கும் சமூகமயமாக்கலுக்கும் ஆளுமை விருத்திக்கும் இடையில் மிகநெருக்கமான பங்களிப்பை வழங்குகின்றது. இக்காலத்தில் பெற்றோரகளின கரிசனையே எதிர்கால பிள்ளையின் ஆரோகியத்திலும் ஆளுமை வளர்ச்சியிலும் அறிவு வளர்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்தும்.



**கல்வித் தரிசனம்**

**பெற்றோரின் பங்களிப்பு**

ஒரு குழந்தையின் விருத்தி மற்றும் வளர்ச்சியில் தாய், தந்தை இருவரதும் கரிசனை முக்கியமானதாகும். ஆரோக்கியமும் நல்லொழுக்கமும் ஆளுமையும் கொண்ட மனிதனாக உருவெடுக்க குழந்தையை வளர்க்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும். பெற்றோர்கள் குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சிக் காலத்திலும் ஒவ்வொரு விதமான உளநலன் விருத்திச் செயற்பாடுகளைக் குழந்தையிடம் கண்டறிதல் வேண்டும்.

**கருவுற்றகாலம் முதல் பிறப்பு வரையான காலம**

கருவுற்ற நாள்முதல் குழந்தையின் வளர்ச்சியில் தாயின் ஆரோக்கியம் முக்கியமானதாகும். போஷாக்கான உணவுகள் உண்ணுதல், மருத்துவ ஆலோசனைகள் பெறுதல், அதன்படி நடத்தல் மற்றும் தடுப்பூசிகள் ஏற்றுதல், மாத்திரைகள், பூச்சி மாத்திரைகள் பாவித்தல் போன்றன கட்டாயமாக ஒழுங்கு முறைபபடி மேற்கொள்ளப்பட வேணடும். மேலும் இக்காலத்தில் மகிழ்ச்சிக்குரிய நிகழ்வுகளில் கலந்து கொளவது,அறிவியல் பூர்வமான கற்கைகள் மற்றும் நூல்கள் வாசித்தல் போன்றவற்றில் ஈடுபட வேண்டும்.

மாறாக துன்பகரமான நிகழ்வுகள், குடும்பப்பிரச்சினைகள், வன்முறைகள் என்பன தவிர்க்கப்பட வேண்டும். இச் செயற்பாடு குழந்தையின் ஆரோக்கியத்திலும், உளநலவிருத்தியிலும் பெற்றோரின் முதற்படியான பங்களிப்பாக அமைகின்றது.

**பிறப்புமுதல் ஒரு வயது வரை**

இக்காலப்பகுதியில் குழந்தை உளவியல் பற்றி பெற்றோர அறிந்திருத்தல் அவசியமாகும். ஆயினும் எல்லாப் பெற்றோரும் இவற்றை அறிந்து கொள்ள வாய்ப்பில்லை என்பதனால்குடும்ப சுகாதார திணைக்கள உத்தியோகத்தரால் கூறப்படும் அறிவுரைகளைக் கேட்டு அதன்படி ஒழுக வேண்டியது பெற்றோரது கடமையாகும். குழந்தையின் ஆரோக்கியம் தொடர்பாக குழந்தை வளர்ச்சிப் பதிவேட்டை வாசிப்பதுடன் மாதாந்தம் விருத்தி, வளர்ச்சி என்பனவற்றை உரியமுறையில் பதிவதும் பதிந்துள்ளவற்றைப் பார்வையிடுவதும் தேவையான தடுப்பூசிகளை உரியமுறையில் ஏற்றுவதும் போஷாக்கான உணவு வழங்குவதும்தாய்பால் உரிய காலம வரை வழங்க வேண்டியதும் கண்பார்வை, செவிமடுத்தல், பேச்சு என்பவற்றை நன்கு கவனிக்கவேண்டியதும் அவசியமாகும்

உதாரணமாக :-

- ஒலிகளை நோக்கி கணகளைத் திருப்புகின்றதா?
- முகத்தைப் பார்த்து சிரிக்கின்றதா? கதை பேசுகின்றதா?
- தெரியாதோரைக்கண்டுபயங் கொளகின்றதா?
- கண்பார்வை (வாக்கு) எவ்வாறு உள்ளது.?

போன்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். பிள்ளையின் செயற்பாடுகளில் அல்லது அங்கங்களில் அசாதாரண நிலை ஒன்றை நீங்கள் காணுகின்ற போது தயக்கமின்றி உங்கள் பிரதேசத்தில் உள்ள குடும்ப ல உத்தியோகத்தரை நாடிஅவரிடம் கூறுகின்ற போது அவர் உங்கள் குழந்தையின் அசாதாரண நிலையை பார்வையிடுவார். அவசியம் ஏற்படின் வைத்தியரை நாடுவதறகான வழிவகைகளை அவர் ஏற்படுத்திக் கொடுப்பார்.

**1 தொடக்கம் 2 வயதுவரை**

இக்காலத்திலும் பெற்றோர்கள், பிள்ளைகள் மீது கூடிய கவனம் செலுத்துவதன் மூலம் பிள்ளைகளின் உடல் நலக் குறைபாடுகளை இலகுவாக கண்டுபிடிக்க முடியும். உதவி இன்றி நடத்தல், 2அல்லது 3 வினைச் சொற்களை உச்சரித்தல், 10 இற்கும் மேற்பட்ட பெயர்ச் சொற்களை கூறுதல், அங்கங்களின் பெயர்களை கூறுதல். படியேறுதல்,உணவு உண்ணப் பழகுதல்,அடம்பிடித்தல், போன்ற செயற்பாடுகளைஅவதானித்தல, உரியகாலத்தில் தடுப்பூசி ஏற்றுதல், மாதாந்தம் வளர்ச்சி, விருத்தி தொடர்பாக குடும்ப சுகாதார உத்தியோகத்தரை நாடி பரிசோதித்தல் மற்றும் மருத்துவ வசதி தேவைப்படின் வைத்தியரை நாடுதல் போஷாக்கு குறைவு எனின் போஷாக்கான உணவு வழங்குதல். இவை இப்பருவத்தில் குழந்தையின் உளநல விருத்தியில் பெற்றோரது மற்றுமொரு பங்களிப்பாகும்.

**2 தொடக்கம் 3 வயதுவரை**

இப்பருவம் குடும்ப உறவுகளுக்கு அப்பால் உறவினர்கள் மற்றும் சுற்றத்தவர்கள் போன்றோர்களுடன் பிள்ளை உறவு கொள்ள முற்படும் காலப்பகுதியாகும். இன்றைய இயந்திரமயமான இவ்வுலகில் பெற்றோரின் தொழில் நிமித்தமும், தனிக் குடும்ப வாழ்க்கை அமைப்பின் காரணமாகவும் பிள்ளைகளை 2 வயதிலே முன்பள்ளிகளில் சேரக்கும் நிலை உருவாகின்றது. இங்கு பெற்றோரின் கரிசனை என்பது முக்கியமானது. உண்மையில் 2 வயது என்பது பிள்ளையின் சுதந்திர உணர்வும், விளையாட்டும் முக்கியமாக விரும்பும் பருவம் ஆகும். இக்காலத்தில் பிள்ளைகள் அதிகம் விரும்புவது வெளியிடங்களுக்கான தரிசிப்புக்கள் ஆகும். அவற்றிற்கு பிள்ளைகளை அழைத்துச் செல்வது பெற்றோரின் கட்டாய கடமை ஆகும். அவ்வாறு அழைத்துச் செல்லும் போது அவ்விடங்கள் தொடர்பாக பிள்ளைக்கு ஏற்ற வகையில் அவை தொடர்பாக விளங்க வைக்க வேண்டும். மேலும் தந்தை, தாய் வேலைசெய்யும் இடங்களுக்கு அழைத்துச் சென்று அவை தொடர்பாகவும், தனது வேலைகள் தொடர்பாகவும், சிறிய விளக்கங்கள் அளிப்பது பிள்ளையின் ஆளுமை விருத்திக்கு ஊன்றுகோலாக அமையும்.

**3 தொடக்கம் 5 வயதுவரை**

3 தொடக்கம்5 வயது வரையான காலப்பகுதியில் முன்பள்ளிக்கு பிள்ளைசெல்லும் போது சரியான முன்பள்ளியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அன்பு, பாதுகாப்பு, ஆசிரியர்களின் தரம், அனுபவம், சமூக மதிப்பீடு என்பன முக்கியமாகும். பிள்ளை முன்பள்ளி செல்லும் போது அதற்கான தயார்ப்படுத்தல்களை தினமும் பெற்றோர் கவனிகக வேண்டும். காலை உணவு சமைததே வழங்க வேண்டியது அவசியமாகும். ஆனால் அதிகமான பெற்றோர்கள் தங்கள் வேலைச் சுமைகளைக் குறைப்பதற்காக வெதுப்பகங்களில் உற்பத்தி செய்யப்படும் உணவுகள் அதிகாலையிலே வாசல் தேடி வருவதனால் அவற்றையே வாங்கிக் கொடுத்து அனுப்புகின்றார்கள். இதனால் அவ்வுணவுகளில் உள்ள இரசாயனக் கலவைகள் பிள்ளையிடத்தில் மந்தபுத்தி, போசனைக் குறைபாடு என்பவற்றை ஏற்படுத்துகின்றது. இவை பிள்ளையின் உளநலனிலும் பாதிப்பை ஏற்படுத்தும். இவற்றைப் பெற்றோர் தவிர்க்க வேண்டியது அவசியமாகும். இது குழந்தையின் உளநல விருத்தியில் பெற்றோரது மற்றுமொரு பங்களிப்பாகும்.

முன்பள்ளி விட்டு வீடு வந்த பிள்ளையிடம் அன்பாகப் பேசி, உடற் சுகாதாரத்தை வளர்க்க கை,கால்,முகம் கழுவுதலுக்கு வழிப்படுத்துதல் வேண்டும். பின்னர் மதிய உணவினை வழங்கி பிள்ளை சுதந்திரமாக வலம் வர இடமளிக்க வேண்டும். ஆனால் சில பெற்றோர் பிளளை வீட்டு வாசலுக்கு வரும் போதே இன்று என்ன படித்தாய்? கொப்பியைக் காட்டு, பென்சிலைக்காட்டு? முறித்து விட்டாயா? என்ற வினா அம்புகள் தொடுக்கப்படும் போது பிள்ளையின் மனம் பாதிப்படைகின்றது. இவற்றைப் பெற்றோர் தவிர்க்க வேணடும். வீட்டிற்கு வந்து பிளளை ஓய்வாக இருக்கும் போது அன்றைய நிகழ்வுகள் தொடர்பாக கலந்துரையாடுவதே உசிதமாகும்.

**பெற்றோரின் நல்லுறவு**

பெற்றோர் எப்போதும் ஒற்றுமையுடனும் சந்தோசமாயும் விட்டுக்கொடுப்புடனும்வாழ்தல்வேண்டும் ஒருவேளை உணவு நேரத்திலாவது அனைவரும் ஒன்றிணைந்து உணவு உண்ணும் பழக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும். இதன்மூலம் பிள்ளைகளிடத்தில் அன்பும் பண்பும் நல்லொழுக்கமும் வளர்ச்சியடையும். ஏதிர்பாராமல் ஏற்படக்கூடிய,சிறு முரண்பாடுகளையும் பிள்ளைகள் முன்னால் தவிர்க்க வேண்டியது அவசியமாகும். இவை பிள்ளையின உளவிருத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும் பிள்ளைகளிடம் பாரபட்சம் காட்டுவதையும் ஒப்பிட்டுப் பேசுவதையும் இக் காலத்திலும் எக்காலத்திலும் பெற்றோர் நிறுத்த வேண்டும். இவையும் பிள்ளையின் உளநல விருத்தியில் பெற்றோரின் மற்றுமொருபங்களிப்பாகும்.

**வீட்டுச் சூழல்**

வீட்டுச் சூழல் பிள்ளை விரும்பும் இடமாக அமைய வேணடும். விளையாடவும் விளையாட்டுப் பொருட்களைக் கையாளவும் ஏற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பல்வேறு நிறங்களிலான விளையாட்டு உபகரணங்கள், பட அட்டைகள், மிருகங்கள், பறவைகள். சமையல் உபகரணங்கள் போன்ற விளையாட்டு உருவங்களை வாங்கிக் கொடுக்க வேண்டும். விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுத்தால் போதும் என்ற நிலையிலும் பெற்றோர் நின்று விடுதல் கூடாது. பிள்ளைகளுடன் சேர்ந்து தாமும் விளையாடுவதன் மூலம் பிள்ளையை ஊக்குவிக்க முடியும். அத்துடன் பிள்ளை பொருட்களை எவ்வாறு கையாளுகின்றது என்பதையும் பெற்றோர் அறிந்து கொள்ள முடியும். விளையாடி முடிந்ததும் பொருட்களை உரிய இடத்தில் கொண்டு சென்று வைக்கவும் பிளளைகளை வழிப்படுத்த வேணடும்.

வீட்டு வேலைகளில் பெற்றோர் ஈடுபடும் போது உதாரணமாக சமையல் வேலை, சட்டி, பானை கழுவுதல், வீடு கூட்டுதல் போன்ற நடவடிக்கைகளின் போது பிள்ளைகளும் அவ்வேலைகளில் ஈடுபட முற்படுவது இயல்பானதே. இதனைப் பெற்றோர் தடுத்து விடுவதுடன் அடித்துத் துரத்திவிடுவதும் எல்லோரது வீடுகளிலும் காணக் கூடிய ஒன்று. இது தவறான வழிகாட்டலாகும். பிள்ளைகள் இயல்பாக பொருட்களைக் கையாளும் போது கை நார்த்தசைகள் பலம் பெறுகின்றன. இதன்மூலம் சிறந்த முறையில் பென்சில் பிடித்து எழுதுவதற்கான பலம் பிள்ளைக்கு கிடைக்கின்றது. எனவே, பிள்ளைகள் வீட்டு வேலைகளில் ஈடுபட வழிப்படுத்தல் வேண்டும்.

**முடிவுரை**

பிள்ளைகளைப் பெற்றெடுத்தால் மட்டும் போதும் என்ற நிலையில் பெற்றோர் நின்று விட முடியாது. உடல்,உள,சமூக ஆரோக்கியம் கொண்ட மனிதனாக குழந்தை உருவெடுக்க பெற்றோர் அதிக அக்கறை செலுத்த வேண்டும். பிறப்புத் தொடங்கி 5வயது வரை பிள்ளைகளின் உளநல விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு என்பது கண்ணில் எண்ணெய் ஊற்றியது போன்று விழிப்பாக இருப்பதன் மூலமே பிள்ளையின் தலைவிதி ஆரோக்கியமாக நிர்ணயிக்கப்படும்.

த.மதியழகன்
பட்டப்பின் கல்வி டிப்ளோமா,
யாழ்.பல்கலைக்கழகம்.

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3.2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நோக்கங்களுடன் ஜெனீவா தீர்மானம்

## ஒத்துழைக்கமாட்டோம் என்கிறார் நியோமல்

(கொழும்பு)

அனைத்துலக விசாரணைப் பொறிமுறையை வலியுறுத்தும் வகையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இலங்கை ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார பிரதியமைச்சர் நியோமல் பெரேரா கூறுகையில்,

உள்நாட்டுப் பொறிமுறையில் உருவான நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் மாத்தரமே சர்வதேசத்தினதும், ஐ.நாவின் கீழியங்கும் அமைப்புகளினதும் ஒத்துழைப்பு பெறப்படும்.

ஐ.நா. மனிதவுரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு நிராகரித்திருக்கும் நிலையில், குறித்த தீர்மானத்தை ஏற்று சர்வ தேசத் துடன் இணைந்து செயற்பட இலங்கை முன்வர வேண்டும்என்று அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் கோரியுள்ளன.

ஜெனீவாவில் அரசியல் உள் நோக்கங்களுடன் நிறைவேற்றப் பட்டிருக்கும் தீர்மானத்தை திட்ட வட்டமாக நிராகரித்து விட்டோம்.

மனிதவுரிமை விடயத்தில் இலங்கை சாதகமான திசையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. அது விடயத்தில் வேறு நகழ்ச்சி நிரல்களைத் திணிப்பதற்கு இடமளிக்க முடியாது.

நல்லிணக்க ஆணைக்குழுவின பரிந்துரைகள் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.



அதை மேலும் விரிவுபடுத்தி உள்நாட்டுப் பொறிமுறையைப் பலப்படுத்த வேண்டுமானால், சர்வதேச ஒத்துழைப்பையும், அமைப்புகளின் உதவிகளைப் பெறுவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்.(2)

# மாகாண சபை தேர்தல் முடிபுகள் மூலம் இலங்கையின் எதிர்காலம் புலப்படுகிறது

## த ஹிந்து நாளிதழ் சுட்டிக்காட்டு

மேல் மற்றும் தென்மாகாண சபை தேர்தலின் மூலம் இலங்கையின் எதிர்காலம் தொடர்பிலான வெளிப்பாடுகள் புலப்படுவதாக த ஹிந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பில் அந்நாளிதழில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

இம் முறை இடம்பெற்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வாக்குகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த இரு மாகாண சபை தேர்தலுடன் ஒப்பிடும் போது அரசாங்கத்திற்கு பெருவாரியான ஆசனங்கள் இம்முறை குறைவடைந்துள்ளது

குறிப்பாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ள வாக்கு வீழ்ச்சி குறித்து விசேடமாக கவனம் செலுத்த வேண்டும்.

இந் நிலையில் தென்மாகாண சபை தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு தென்மாகாணத்தில் வாக்குகள் அதிகரித்து காணப்பட்டாலும், கொழும்பில் அந்த கட்சிக்கு வாக்குகள் குறைவடைந்துள்ளன.

அத்துடன் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா பெற்றுக் கொண்ட வாக்குகள் தொடர்பிலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் வாக்காளர்கள, அரசாங்கத்திற்கு சவால்விடுக்கும் தலைவர் ஒருவரை எதிர்க்கட்சியில் இருந்து தேடுவதாகவும் அந்த நாளிதழ் சுட்டிக்காட்டியுள்ளது. (2)

# நீர்த்தேக்கங்களில் மழை வேண்டி 4 ஆயிரம் தீபங்கள் ஏற்றி ஆராதனை

நீர்த்தேக்கப் பகுதிகளில் மழை வேண்டி 4ஆயிரம் தீபங்கள் ஏற் றப்பட்டு அநுராதபுர ஸ்ரீமாபோதியில் விசேட சமய வழிபாடுகள் நடத்தப்பட்டுள்ளன.

உரிய காலத்தில் மழை பெய்து மின் உற்பத்தித் திட்டங்கள் அமைந்துள்ள நீர்த்தேங்கங்களில் நீர் நிரம்ப வேண்டும் என்ற வேண்டுதலுடன் மின் வலு எரிசக்தி அமைச்சு ஏற்பாடு செய்திருந்த இந்த சமய நிகழ்வுகளில் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, பிரதியமைச்சர் டபிள்யூ பீ. ஏக்கநாயக்க, இலங்கை மின்சார சபையின் தலைவர் டபிள்யூ. பீ கணேகல உட்பட முக்கியஸ்தர்கள பலரும் கலந்துகொண்டுள் ளனர்.

தற்போது வரட்சியான கால நிலை தொடர்வதால் உரிய காலத்தில் மழை பொழிந்தால் மாத்திரமே மின் உற்பத்தி தடையின்றி இடம்பெறும் என்பதைக் கவனத்திற் கொண்டு மின் வலு எரிசக்தி அமைச்சு இந்த சமய நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருநதது.

நீர்த்தேக்கங்களிலிருந்து 12 குடம் தண்ணீர் கொண்டு வரப்பட்டு ருவன்வெலிசாயவிலிருந்து அதனை ஊர்வலமாகக் கொணடு சென்று அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அதனை ஸ்ரீமாபோதி பெரு மானுக்கு சமர்ப்பித்துள்ளார். பெருமளவு மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டுளளனர். (2)

# சிவில் உரிமை மறுக்கப்பட்டவர் வாக்களிப்பில் பங்கேற்க முடியாது

## சஞ்சய கமகே சுட்டிக்காட்டு

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா வாக்களிக்கத் தகுதியற்றவர் என சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் செயலாளர் சஞ்சய கமகே தெரிவித்துள்ளார்.

சிவில் உரிமை மறுக்கப்பட்ட ஒருவரினால் வாக்களிப்பில் பங்கு பற்ற முடியாது.

சிவில் உரிமை மறுக்கப்பட்ட ஒருவருக்கு மீளவும் அந்த உரிமைகளை வழங்கக் கூடிய அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே காணப்படுகின்றது.

சரத் பொன்சேகாவிற்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கிய போதிலும், சிவில் உரிமைகளை வழங்கவில்லை.

இதேவேளை, சிவில் உரிமை மறுக்கப்பட்ட ஒருவருக்கு வாக்களிக்க முடியும் என்ற போதிலும் தேர்தலில் போட்டியிட முடியாது என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஆறு மாத கால சிறைத்தண்டனை அனுபவித்த ஒருவருக்கு சிவில் உரிமைகள் மறுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிபந்தனை அடிப்படையிலேயே சரத் பொன்சேகாவிற்கு மன்னிப்பு வழங்கப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார். (2)

# இன்று ஒரு தகவல்

## பொய் முகம்

"எனக்கு இருக்கும் குழப்பத்தில் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும் போல் இருக்கிறது சேர்" என்றார் எனது நண்பர்.

ஏதோ இதுவரையில் அது பிடிக்காதது போல மனதில் குழப்பம் இல்லாத மனிதன் யார்? "என் மனதில் குழப்பமே இல்லை சேர் நான் மிகவும் தெளிவாக இருக்கிறேன்" என்று ஒருவர் கூறுகிறார் என்று வையுங்கள். அது அவரே அவரைப் பற்றி தெரியாமல் கூறும் வார்த்தை.

இப்போது உங்கள் மனதில் குழப்பம் இருக்கிறா? இல்லையா? என்பதை நீங்களே தெரிந்து கொள்வதற்கு ஒரு வழி இருக்கிறது என்றார் ஒரு பெரியவர். அது என்ன தெரியுமா? யாருமில்லாத இடத்தில் ஒரு தனி அறைக்குள் நுழைந்து பூட்டிக் கொள்ளுங்கள். ஒரு வானொலியில் "ரெக்கோர்ட்" போட்டு விடுங்கள். உங்கள் மனதில் வருவதை சிறிது கூட மறைக்காமல் சத்தம் போட்டுச் சொல்லுங்கள் என்ன தோன்றுகிறதோ அதை அப்படியே கூறிவிட வேண்டும். அதில் அர்த்தம் எல்லாம் பார்த்துக் கொண் டிருக் கக்கூடாது. மனசு விட்டுப் பேசுங்கள். சத்தம் போடுங்கள். கால் மணி நேரம் கழித்து நீங்கள் பேசியவற்றையெல்லாம் போட்டுக் கேளுங்கள். பைத்தியம் பிடித்த ஒருவரின் பேச்சை நீங்கள் கேட்டது போலத் தோன்றும். உங்களுக்குள் எவ்வளவு குழப்பம் உங்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கிறது என்று புரியும். எவ் வளவு அபத்தமான எண்ணங்கள் நமக்குள் இருக்கிறது என்பது புரியும். ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத துண்டுகள் நம் மனதுக்குள் மிதக்கிறது என்பது விளங்கும்.

இது உண்மை. நீங்கள் வேண்டுமானால் பரீட்சித்துப் பாருங்கள். இதற்கு அர்த்தம் என்ன? பைத்தியக்கார விடுதியில் இருப்பவனுக்கு நூறு சதவீதம் பைத்தியம் பிடித்திருக்கிறது. நமக்கு எவ்வளவு இல்லை. ஆனாலும் நமது நிலை வெளியில் தெரிவ தில்லை.

நாம் சரியான மனநிலையில் இருப்பது போல் தெரிகின்றோம். மற்றவர்களிடம் இருந்து நாம் நிறைய மறைத்து விடுகின்றோம். இதற்காக நாம் தினமும் காலையிலிருந்து இரவு தூங்கப்போகும் வரை சந்திக்கும் நபர்களுக்குத் தகுந்த மாதிரி நமது முகமூடி மாறிக் கொண்டே இருக்கும். இதில் நாம் மற்றவர்களை மட்டும் ஏமாற்றுவதில்லை. நம்மையும் நாமே ஏமாற்றிக் கொள்கிறோம். ஆளுக்குத் தகுந்த மாதிரி நமது முகத்தை மாற்றிக் கொண்டு பொய் முகத்துடன் காட்சியளிக்கின்றோம் என்பதை நாம் கவனிப்பதில்லை. அதனால் நமது உண்மையான முகம் எது என நமக்கே தெரிவதில்லை. நமது பொய்களை நாமும் நம்பிக் கொண்டு மற்றவர்களையும் நம்ப வைக்கும் காரியத்தைத்தான் செய்து கொண்டிருக்கிறோம். சரி இதெல்லாம் இருக்கட்டும். மனதில் இருந்து குழப்பங்களை நீக்குவது எப்படி? நிதான நிலையை அடைவது எப்படி? என்று கேட்டால் அதற்கும் பதில் சொல்கிறார் அந்தப் பெரியவர்.

ஒரு பைத்தியக்காரன் என்ன நினைக்கிறான் என்றால் மற்றவர்களைப் பைத்தியம் என்று நினைக்கிறான். தனக்குப் பைத்தியம் என்பது அவனுக்கு தெரிய ஆரம்பித்தால் அவன் நிதான புத்தியை அடையவாய்ப்புள்ளது.

அதனால் நாம் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? நாம் நிதானம் தவறிய நிலையில் இருப்பதை முதலில் உணர்ந்து விட்டால் போதும். நிதான நிலைக்கு நாம் முன்னேறி விடலாமாம். நமக்கு ஏற்படும் விளைவுகளுக்கு நாம் தான் பொறுப்பு என்பதை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். நமக்குள் ஒரு சரியான மையத்தை ஏற்படுத்தி அதில் நமக்கு நாமே எஜமானாக உட்கார்ந்து கொள்ள வேண்டும். சரியான திசையில் நம்மை நாமே கொண்டு செல்ல வேண்டும். இந்த வேளையில் நாம் தீவிரமாக செயற்பட்டால் அதன்பின்பு நாம் பொய் முகத்துடன் அலைய வேண்டிய அவசியமில்லை.

உண்மை முகத்துடன் நிதான நிலையில் பேரானந்தம் அடையலாம். சிரித்து வாழலாம். இப்படியெல்லாம் பெரியவர்கள் கூறுகின்றனர். நம் அளவிற்கு இவை எந்தளவு சாத்தியமென்று தெரியவில்லை. இருந்தாலும் முயற்சி செய்வோம். முடிந்தளவு முன்னேறுவோம். நமக்குத் தெரிந்த முகம் வேறு மாதிரி. ஒரு ஆள் இன்னொருவனிடம் கேட்டான். "ஏன் சேர் இந்த உலகத்தில் ஒரே மாதிரி முகத்துடன் ஒன்பது பேர் இருப்பதாக சொல்கிறார்களே! அது சாத்தியமா?" என்றான். "சாத்தியம்தான் ஏன் அப்படிக் கேட்கிறாய்?" என்றான் அவன். "அதற்கில்லை போன மாதம் உன்னிடம் நான் வாங்கியிருந்த ஆயிரம் ரூபாவை நேற்று உன்னை மாதிரியே இருந்த ஒருவன் வந்து திரும்பி வாங்கிக் கொண்டு போய் விட்டான். அதனால்தான் கேட்டேன்" என்றான் இவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினப் படுகொலைகளும் பிணந்தின்னிகளும்- பெ.மணியரசன்



ஆகாதவனை அழிப்பதற்கான பல்வேறு சூழ்ச்சித் திட்டங்களில் "அனுகூலச் சத்துரு" உத்தியும் ஒன்று என்று ஆரியநூல்கள் கூறுகின்றன. அவற்றுள் இன்னொரு உத்தி திருதராட்டிர ஆலிங்கனம்.

நண்பனைப் போல் உறவு கொண்டு, உதவுவது போல் நடித்து, நண்பன் ஏமாந்த வேளையில் அவன் கழுத்தை அறுப்பது அல்லது அவனை ஆபத்தில் மாட்டி விடுவது. இது அனுகூலச் சத்துரு உத்தி. திருதராட்டிர ஆலிங்கனம் என்பது, அன்பு பாராட்டுவதுபோல் ஒருவரை ஆரத்தழுவி, அப்படியே எலும்பு நொறுங்கிட இறுக்கி அணைத்துக் கொன்று விடுவது! ஈழத்தமிழர் இனப்படுகொலை மீது நடவடிக்கை எடுத்து இலங்கை அரசுத் தரப்பினரைத் தண்டிப்பது தொடர்பான சிக்கலகளில் அமெரிக்காவும் இந்தியாவும் கடைபிடிக்கும் உத்திகள் மேற்கண்ட ஆரிய சூழ்ச்சித் திட்டங்களை ஒத்தவை.

ஜெனிவாவில் 27.03.2014 அன்று ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் அமெரிக்கா முன்மொழிந்து 23 நாடுகள் ஆதரித்து நிறைவேற்றப்பட்ட -ஈழத்தமிழர் இனப்படுகொலை தொடர்பான தீர்மானம் அனுகூலச் சத்துரு உத்தி சார்ந்தது என்பது தெளிவாகியுள்ளது.

இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா ஐ.நா.மனித உரிமை மன்றத்தில் தீர்மானம் கொண்டு வருகிறது என்று இவ்வாண்டும் உலக அளவில் பரப்புரை செய்யப்பட்டது. அதன் தமிழகப் பிரசார பீரங்கியாக வழக்கம் போல் இவ்வாண்டும் கலைஞர் கருணாநிதி செயறபட்டார். அவர் 01.02.2014 அன்று டெசோ கூட்டம் நடத்தி, அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டார். அப்பொழுது அமெரிக்கத் தீர்மானத்தில் என்ன இருக்கிறது என்று வெளியாகவில்லை. அதில் என்ன இருக்கிறது என்பதைக் கருணாநிதியும் வெளிப்படுத்தவில்லை.

இந்தியா அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிக்குமா அல்லது எதிர்க்குமா என்ற வினா பெரிய அளவில் விவாதிக்கப்பட்டது. கடைசியில் வாக்கெடுப்பில் இந்தியா கலந்து கொள்ள வேண்டாம் என்று முடிவு செய்தது. நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ராஜபக்ச கடுமையாகக் கண்டிக்கிறார். அமெரிக்கத் தீர்மானத்தில் அடங்கியுள்ள சரக்குகளை எடை போட்டுப் பார்த்தால் அமெரிக்கா- இந்தியா- இலங்கை மூன்று நாடுகளும் திரைக்குப் பின்னால் கூட்டாகப் பேசி, திரைக்குப் பின்னால் ஒத்திகையும் நடத்திவிட்டு- பார்வையாளர்கள் முன்னே அரங்கத்தில் எதிரும் புதிருமானவர்களாக நின்று வசனம் பேசி நாடகம் நடத்தியிருப்பது அம்பலமாகி விட்டது.

கடந்த ஆண்டு ஐ.நா.மனித உரிமை மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை விடப் புரட்சிகரமான தீர்மானம் இந்த ஆண்டு வந்துள்ளது. தற்சார்புள்ள பன்னாட்டுப் புலனாய்வுமனறம் அமைக்குமாறு அமெரிகக்த் தீர்மானம் கோருகிறது என்று புலம் பெயர்ந்த தமிழர்களில் ஒரு சாராரும், தமிழ் நாட்டுத் தமிழர்களில் ஒரு சாராரும் டமாரம் அடித்துத் திரிந்தனர்.

"சுதந்திரமான சர்வதேச விசாரணையை அமெரிக்கத் தீர்மானம் கோருகிறது" என்று டெசோ கருணாநிதியும் குந்திக் குரலெடுத்துக் கூவிக் கொண்டிருந்தார். ஆனால் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் அந்தக் கற்பனைக்கெல்லாம் ஆப்பு வைத்து விட்டது.

ஐ.நா.மனித உரிமை ஆணையர் விசாரிக்கலாம் என்ற அளவில் பன்னாட்டுப் புலனாய்வை வெட்டிக் குறுக்கிவிட்டது இத்தீர்மானம். ஐ.நா.மனித உரிமை ஆணையரும் தன் விருப்பப்படி தற்சார்புடன் - சுதந்திரமாக இலங்கைக்குப் போய் விசாரிக்க முடியாது. ராஜபக்ச அரசு அனுமதித்தால் தான் ஐ.நா. மனித உரிமை ஆணையரும் விசாரிக்க முடியும என்கிறது தீர்மானத்தின் பிரிவு11.

"மேலே கூறப்பட்ட நடவடிக்கைகளைச் செயற்படுத்த, இலங்கை அரசின் ஒப்புதல் பெற்று ஐ.நா.மனித உரிமை ஆணையரும் மற்றும் தொடர்புடையவர்களும் இலங்கை அரசுக்கு அறிவுரையும் தொழில் நுட்ப உதவிகளும் செய்யலாம்".

இலங்கை அரசு என்பது சாரத்தில் யாரைக் குறிக்கிறது? இனப்படுகொலைக் குற்றவாளி ராஜபக்சவை குறிக்கிறது. ராஜபக்ச அனுமதித்தால் மனித உரிமை ஆணையர் அறிவுரை வழங்கலாம். கவனிக்க வேண்டும். அது கூடக் குற்றப் புலனாய்வு செய்வதற்கல்ல, அறிவுரை கூறுவதற்கு! சுதந்திரமான அதிகாரம் படைத்த பன்னாட்டு வல்லுநர்களைக்கொண்ட தமு குற்றப் புலனாய்வு செய்வது என்ற கோரிக்கையை குழிதோண்டிப் புதைத்து விட்டது அமெரிக்கத் தீர்மானம்.

அமெரிக்கத் தீர்மானம் இனப்படுகொலை பற்றிய புலனாய்வு என்று கூறாவிட்டாலும் போர்க்குற்றம் என்று கூறுகிறது எனப் பூரித்துப் போனார்கள் தமிழக இன உணர்வாளர்கள் சிலர். போர்க்குற்றத்திற்குள் இனப்படுகொலைக் குற்றமும் இடம் பெறும் என்று விரித்துரைத்தனர் விளக்கவுரை விற்பன்னர்கள். ஆனால் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் போர்க்குற்றம் என்று கூடக் கூறவில்லை. அத்தீர்மானத்தின் 10 ஆவது பிரிவில் கீழ்வருமாறு கூறப்பட்டுள்ளது:

"தொடர்ந்து கொண்டுள்ள மனித உரிமை மீறல்கள் மீது நடவடிக்கை எடுக்க நம்பகமான உள்நாட்டு செயன்முறைகள் இல்லாததால் பன்னாட்டு விசாரணைப் பொறியமைவு தேவை என்று மனித உரிமை ஆணையர் அலுவலகம் பரிந்துரைத்தது. இதைக் கவனதில் கொண்டு கீழ்வரும் முடிவுகள் முன்வைக்கப்படுகின்றன".

இலங்கை அரசு இத்திசையில் செயற்படுவதில் ஏற்படும் முன்னேற்றத்தை மதிப்பிடவும், அங்கு மனித உரிமைகள் பற்றிக் கண்காணிக்கவும் ஐ.நா.மனித உரிமை ஆணையம் செயற்பட வேண்டும்.

"இலங்கையில் இருதரப்பினரும் நடத்திய மனித உரிமை மீறல்களையும், அதிகார அத்து மீறல்களையும் அவை தொடர்பான குற்றங்களையும் விரிவாகப் புலனாய்வு செய்யவும், அரங்கேற்றப்பட்ட குற்றங்களை மெய்ப்பித்து நிலைநாட்டவும் அவர்கள் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதைத் தவிர்க்கவும், அவர்கள் மீதான நடவடிக்கையை உறுதி செய்யவும் தொடர்புடைய வல்லுநர்களின் உதவியைப் பெறவும் ஐ.நா. மனித உரிமை ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

என்ன நடந்துள்ளது என்பதை மனித உரிமை மன்றத்தில் 27 ஆவது கூட்டத்தில் வாய் மொழியாகக் கூற வேண்டும்.மனித உரிமை மன்றத்தின் 28 ஆவது கூட்டத்தில் முழுமையான விவாதத்திற்குரிய விரிவான அறிக்கையை மனித உரிமை ஆணையம் அளிக்க வேண்டும்". மேற்கண்ட தீர்மானத்தின் செயற்பாட்டு பகுதியில் எங்கேயும் போர்க்குற்றம் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. அது மட்டுமல்ல, இலங்கை அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் சமதட்டில் வைத்து இரு தரப்பும் செய்த மனித உரிமை மீறல் குற்றங்களை, அதிகார அத்துமீறல்களை விசாரிக்க வேண்டும் என்கிறது.

வடக்கு, கிழக்கு மாநிலங்களில் நிறுத்தப்பட்டுள்ள படைப் பிரிவுகளைத் திரும்ப அழைத்துக் கொள்வது, சிங்களக் குடியேற்றங்களைத் தடுப்பது போன்ற எதுவுமில்லை. இத்தீர்மானத்தில் தமிழர் என்ற சொல் கூடக் கிடையாது.

இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் என்று மட்டுமே இத்தீர்மானம் கூறுகிறது. இவ்வாறாக, ஈழச் சிக்கல் ஒரு தேசிய இனச் சிக்கல் என்பதை ஏற்கமறுத்து, மதச் சிறுபான்மைச் சிக்கலாக மடைமாற்றி, சிங்கள பேரினவாதத்திற்கு அமெரிக்கத் தீர்மானம் சேவை செய்கிறது.

ஒருவேளை ராஜபக்ச ஐ.நா. மனித உரிமை ஆணையத்தை இலங்கைக்குள் அனுமதித்தால் அந்த ஆணையத்தின் பணி என்ன? இலங்கை அரசு விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்பும் செய்த குற்றங்கள் மீது ராஜபக்ச அரசு நடத்தும் விசாரணைக்கு உதவியும் அறிவுரையும் வழங்குவதுதான் ஐ.நா.மனித உரிமை ஆணையத்தின் பணி.

இத்தீர்மானம் சொத்தையானது, சோடையானது என்பது அமெரிக்காவுக்குத் தெரியாதா? தெரியும்! திட்டமிட்டுத்தான் இப்படி ஒரு தில்லுமுல்லு தீர்மானத்தை அது முன்மொழிந்தது. தமிழர்களுக்கு நீதி கேட்பதைப் போன்ற தோற்றத்துடன், தமிழர் சிக்கலைப் பயன்படுத்தி இலங்கை அரசைத் தன் கட்டுக்குள் வைத்துக் கொள்ள அமெரிக்காவுக்கு இது ஒரு வழி . அவ்வளவே.

தனது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் போர்ப் படுகொலைகளை மறைக்க ஏற்கனவே மாட்டிக் கொண்டுள்ள மனித உரிமை முகமூடிக்குப் புதுச்சாயம் பூசிக் கொள்ள அமெரிக்காவுக்குக் கிடைத்த புதிய வாய்ப்பு தான் இத்தீர்மானம். இதெல்லாம் இந்திய ஆரிய வர்த்த அரசுககுத் தெரியாதா? தெரியும்! நாடகம் நம்பும் படியாக இருக்க வேண்டாமா ? அதற்காக- அமெரிக்க - இலங்கை அரசுகளிடம் ஒப்புக் கொண்ட பாத்திரத்தைக் கனகச்சிதமாக நடித்துள்ளது.

இந்தியா ஆதரிக்காதது -அமெரிக்கத் தீர்மானத்திற்கு எதிர்வகைக் கவர்ச்சி ஆகும். தமிழின உணர்வாளர்களைக் குழப்பிடும் தந்திரம் ஆகும். தமிழினப் படுகொலைப் போரில பங்கு கொண்ட இந்தியா - தமிழின உணர்வாளர்களின் பகையைத் தேடிக் கொண்டுள்ளது. இந்த மனநிலையில் இந்தியா அமெரிகக் தீர்மானத்தை ஆதரிக்காமல், வாக்கெடுப்பிலிருந்து விலகி நின்றது. தமிழின உணர்வாளர்களிடம் இந்திய அரசின் மீதான எதிர்ப்பைத்தான் முதன்மைப்படுத்தும். அமெரிக்கத் தீர்மானத்தின் சூழ்ச்சியின் மீது உரிய அளவு கவனம் பாயாது.

இந்தியா-அமெரிக்கா - பிரிட்டன்- இலங்கை ஆகிய நாடுகள் சேர்ந்து நடத்தும் ஈழத்தமிழர் சிக்கல் குறித்த விசாரணை நாடகத்தில் கோயபல்ஸ் வேடம் பூண்டுள்ள கருணாநிதி, எட்டப்பராகவே என்றும் செயற்பட்டுப் பழகிப் போன ப.சிதம்பரம் ஆகியோர் அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்காததற்காகக் கண்ணீர் அணையைத்திறந்து விட்டுள்ளார்கள்.

ஒப்பாரி வைக்கும் போது கூட தமது கங்காணி வேலையைக் கச்சிதமாகச் செய்துள்ளார் கருணாநிதி! இந்தியா தமிழர்களின் தாயகமாம். இந்தியா ஆதரித்து வாக்களிக்காமல் புறக்கணித்தது தமிழர்களுக்குத் தலைகுனிவாம்! இந்திய அரசு எப்போதுமே தமிழர்களின் இனப்பகை அரசு என்பதுதான் வரலாறு சொல்லும் பாடம்! ஜெயலலிதாவுக்கு இதைப் பற்றியெல்லாம் கவலை கிடையாது. யாராவது குளத்தை இறைத்துத் தண்ணீரை வெளியேற்றியிருந் தால் மிதக்கும் மீன்களைக் கொத்திச் செல்லப் பருந்தாகப் பறந்து வருவார்!

இலங்கை அரசுகூட இத் தீர்மானத்திற்கு எதிராக நெற்றிக் கண்ணைத் திறந்து நெருப்பைக் கொட்டுகிறது! நாடக மேடைதானே, தீ பற்றிக் கொள்ளாது. இந்தியா, தீர்மானத்தை ஆதரிக்காததால், அதற்குப் பரிசாக, இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் அனைவரையும் திறந்துவிட ஆணையிட்டதாம் அரசு!

அப்படி என்றால், இந்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்கப் பணயக் கைதிகளாகத் தான் ஒவ்வொரு முறையும் தமிழக மீனவர்களை இலங்கை அரசு கைது செய்கிறதா ? எல்லை தாண்டி மீன்பிடித்தார்கள் என்பது போலிக் குற்றச் சாட்டு தானே.

ஐ.நா.மன்றத்தில் இலங்கைக்கான நிரந்தரப் பேராளராக இருந்து ஓய்வு பெற்றுள்ள தயான் ஜெயதிலக ஓர் உண்மையைப் போட்டு உடைத்து விட்டார். "இது இந்தியாவின் மிக நேர்த்தியான இராஜதந்திரம். இந்தியா இலங்கையுடன் கொண்டுள்ள உறவின் வலிமைக்கும் இந்தியா தமிழ் நாட்டை எந்த இடத்தில் வைத்துள்ளது என்பதற்கும் அது ஜெனிவா தீர்மானத்தில் - வாக்களிக்காமல் நடுநிலை வகித்தது தக்க அளவுகோலாக அமைந்துள்ளது.

கொள்கை வகுப்பதில் தமிழ்நாட்டின் உணர்ச்சிகளுக்கு இந்தியா இடம் கொடுக்கவில்லை. ஓரஞ்சாரத்தில் உள்ளவர்கள் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்குக் கட்டளை போட முடியாது என்பதை அது துணிச்சலுடன் உணர்த்தி விட்டது" என்றார்.

தமிழ்நாட்டுத் தமிழர்கள் மீண்டும் தக்க பாடம் கற்றுக் கொள்ள வேண்டிய தருணமிது. ஜெனிவாவில் நடந்தது இந்தியா- அமெரிக்கா- பிரிட்டன்- இலங்கை ஆகிய நாடுகள் முன் கூட்டியே திட்டமிட்டு நடத்திய நாடகம். தமிழர்களை ஏமாற்றி அவரவர் காய் நகர்த்தலுக்குக் கடைப்பிடிக்கப்பட்ட இராஜ தந்திரம். இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கொமன்வெல்த் மாநாட்டுக்குச் சென்று பார்த்து விட்டுப், பன்னாட்டுப் புலனாய்வு வரும் என்று கூறிய பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் - ஜெனிவா போலித் தீர்மானத்தைப் புகழ்கிறார் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.தமிழீழத்தில் தமிழ்த் தேசியக் கூட்ட ணிக்குத் தலைமை தாங்கும் சம்பந்தன் இந்தியாவின் கைத்தடி என்பதை இப்போதும் மெய்ப்பித்துள்ளார். "வாக்களிக்காமல் நடுநிலை வகித்த இந்தியாவின் நிலைப்பாடு ஏமாற்றம் அளித்தாலும், அம் முடிவெடுத்திட இந்தியாவுக்குச் சரியான காரணங்கள் இருந்திருக்கும். இந்தியாவோடு நாங்கள் பேசுவோம்" என்கிறார்.

மேலும் "அமெரிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தத் தீர்மானம் சரியாக செயற்படுத்தப் பட்டால் அது உண்மையான நல்லிணக்கத்திற்கும், நிரந்தரமான அமைதிக்கும் வழி வகுக்கும்" என்கிறார் சம்பந்தன்.

காங்கிரசுக்கும் பா.ஜ.கவுக்கும் இடையே காத்திரமான வேறுபாடு எதுவுமில்லை என்பது மீண்டும் உறுதிப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் இந்தியா வாக்களிக்காமல் நடுநிலை வகித்ததை பா.ஜ.க. தலைமை ஆதரிக்கிறது. ஆனால் அதன் தமிழ்நாட்டுத் தலைவர் பொன்.இராதாகிருஸ்ணன் தந்திரமாக காங்கிரஸ் அரசைக் கண்டிக்கிறார். ப.சிதம்பரம் காங்கிரஸ் அரசின முடிவை ஏற்காமல் பம்மாத்து செய்வதுபோல், பொன்.இராதா கிருஸ்ணனும் தமிழர்களை ஏமாற்றப் போலி எதிர்ப்புக் காட்டுகிறார்.

இத்தீர்மானத்தை ஏற்கச் செய்ய, புலம் பெயர்ந்த தமிழர்களையும் தமிழ்நாட்டுத் தமிழின உணர்வாளர்களையும் வளைத்துப் போட, அமெரிக்கா இரண்டு மாதங்களாக எல்லாச் சித்து வேலைகளிலும் ஈடுபட்டது. ஏற்கனவே அமெரிக்கா - இந்தியா - கருணாநிதி அச்சு இயங்கிக் கொண்டுள்ளது. அந்த அச்சில் சுழலும் ஆரக்கால்களாக சில தமிழின உணர்வு அமைப்புகளும், சில உணர்வாளர்களும் தங்களைப் பொருத்திக் கொண்டார்கள்.

முதற்படியாக, அமெரிக்கத் தீர்மானத்தைப் பிடித்துக் கொண்டு மேலேறுவோம் என்று அவர்கள் தர்க்கம் பேசினார்கள். நூலேணியைப் பிடித்துக் கொண்டு மேலேறலாம், நூலாம்படையைப் பிடித்துக் கொண்டு மேலேற முடியுமா? அறுந்து விழுவோம்! இதெல்லாம் அவர்களுக்குத் தெரியும்! என்ன கமுக்கமோ, அவர்கள் நூலாம்படை அணியை உருவாக்கினார்கள்!

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் தற்சார்புள்ள புலனாய்வு மன்றம் அமைக்கப்பட வேண்டும் என்றும், அமெரிக்கத் தீர்மானத்தை எரிப்போம் என்றும் ஒன்றுதிரண்டிருந்த தமிழக இன உணர்வாளர்களை இந்த ஆண்டு இரண்டாகப் பிரித்து விட்டது அமெரிக்க ஏகாதிபத்தியம்!

போனது போகட்டும்! தமிழகத் தமிழின உணர்வாளர்கள் எல்லாவற்றையும் ஆய்வு செய்து, தற்சார்புள்ள பன்னாட்டுப் புலனாய்வு மன்றம் அமைக்க வேண்டும், தமிழீழத்தில் கருத்து வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று மீண்டும் ஒருங்கிணைந்து முழக்கங்கள் எழுப்புவோம்.

**உலக அரங்கில் மாற்றங்கள் வரும். நம் கோரிக்கைகள் ஏற்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சித்தாந்த கற்கை நெறி ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உயர் பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் முதுகலைமாணி சைவசித்தாந்தக் கற்கை நெறிக்கான பிரிவு IV-2013/14 கல்வியாண்டு ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தில் நடைபெறவுள்ளதால் இக்கற்கை நெறிக்கு பதிவு செய்த அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு பேராசிரியர் ச.சத்தியசீலன் கேட்டுள்ளார். (2)

# சிறப்புப் பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

சொல்வேந்தன் பொன். சுகந்தன் தலைமையில் சிறப்புப்பட்டி மன்றம் இன்று வியாழக்கிழமை இரவு 9 மணிக்கு கரவெட்டி சண்டில்குளம் சம்பந்தர் கடை அருகாமையில் அமைந்துள்ள நவசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய அறிவியல் வளர்ச்சி அழிவைச் செய்கின்றதா? ஆக்கத்தை செய்கின்றதா? என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இடம்பெறவுள்ள இப்பட்டிமன்றத்தில் அழிவைச் செய்கின்றது என ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு, சைவப்புலவர் கா. கமலநாதன், ஆசிரியர் த.அஜந்தகுமார் ஆகியோர் வாதிட ஆக்கத்தைச் செய்கின்றது என கொழும்பு தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு உறுப்பினர் ஜி.இராஜகுலேந்திரா, யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் நயினை எம்.அம்பிகைபாகன் ஆகியோர் வாதிடவுள்ளனர். (2)

# நிர்வாகத் தெரிவு

(சித்தன்கேணி)

மாவிட்டபுரம் மாரியம்மன் கோயிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுச்சபைக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத்தெரிவு இடம்பெற்றது. இதன்போது தலைவராக பொ.ஈஸ்வரன், உப தலைவராக எஸ்.பார்த்தீபன், செயலாளராக வி.டினேஸ், உப செயலாளராக சி.மயூரன், பொருளாளராக திருமதி அ.ராஜபுஸ்பம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (2-17)

# நவநீதம்பிள்ளையால் அமெரிக்கத் தீர்மானத்தை பிடிவாதமாக நடைமுறைப்படுத்த முடியாது-தினேஷ்

(கொழும்பு)

**ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான பிரேரணை மீதான வாக்கெடுப்பின் போது இந்தியா குறித்த பிரேரணை ஐக்கிய நாடுகள் சபையின் விதிமுறைகளை மீறுவதாக அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளது. இந்த முடிவை எடுத்தமை தொடர்பில் இந்தியாவை பாராட்டுகின்றோம் என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையை நடைமுறைப்படுத்த நவநீதம்பிள்ளை நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பது தொடர்பில் விபரிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையை இலங்கை முழுமையாக நிராகரித்துள்ளதுடன், பிரேரணை ஐ.நா. விதிமுறைகளை மீறியுள்ளதாக இந்தியாவும் தெரிவித்துள்ளது.

எனவே மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை பிரேரணையை பிடிவாதமான முறையில் நடைமுறைப்படுத்த முடியாது என்று அவர் தெரிவித்தார்.

பல்வேறு எதிர்ப்புக்களை சந்தித்துள்ள இலங்கை குறித்த பிரேரணையை நவநீதம்பிள்ளை நடைமுறைப்படுத்துவாரானால் அது தவறான விடயமாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கை தொடர்பில் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையானது ஐக்கிய நாடுகள் சபையின் பாரம்பரியங்களையும் விதிமுறைமைகளையும் மீறியுள்ளது.

41 நாடுகளுடன் இணைந்து பிரேரணையை கொண்டு வருவதாக அமெரிக்காவும் பிரிட்டனும் தெரிவித்திருந்தன.

ஆனால் பிரேரணைக்கு 23 நாடுகளே ஆதரவளித்தன. 12 நாடுகள் அதனை எதிர்த்ததுடன் 12 நாடுகள் வாக்களிக்காமல் இருந்தன.

அந்தவகையில் அமெரிக்காவும் பிரிட்டனும் பிரேரணை விடயத்தில் செய்த பிரசாரங்கள் தோல்வியடைந்துள்ளன.

வாக்கெடுப்பின் போது இந்தியா நடந்துகொண்ட விதமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதாவது குறித்த பிரேரணை ஐக்கிய நாடுகள் சபையின் விதிமுறைகளை மீறுவதாக அமைந்துள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது. இது மிகவும் முக்கியமான கூற்றாகும். இந்த முடிவை எடுத்தமை தொடர்பில் இந்தியாவை பாராட்டுகின்றோம்.

இந்நிலையில் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையை இலங்கை நிராகரித்துள்ளது. இதனை அரசாங்கம் தெளிவான முறையில் தெரிவித்துவிட்டது.

மேலும் இலங்கை குறித்த பிரேரணை ஐ.நா. விதிமுறைகளை மீறியுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

அத்துடன் 12 நாடுகள் பிரேரணையை எதிர்த்ததுடன் மேலும் 12 நாடுகள் நடுநிலை வகித்துள்ளன. 23 ஆதரவளித்திருந்தாலும் 24 நாடுகள் அதனை ஆதரிக்கவில்லை.

இவ்வாறு பிரேரணைக்கு எதிர்ப்புக்கள் எழுந்துள்ள நிலையில் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை பிரேரணையை பிடிவாதமான முறையில் நடைமுறைப்படுத்த முடியாது. அவ்வாறு பிடிவாதமான முறையில் அவர் பிரேரணையை நிறைவேற்ற முயன்றால் அது தவறானதாக அமையும் என்றார். (2)



மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் அருணோதய மன்றத்தினரின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையினரின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட இரத்ததான முகாமின் போது... (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

# அமெரிக்காவின் தீர்மானத்தை நீர்த்துப்போகச் செய்ய முடியும்

## பெரேரா எம்.பி.தெரிவிப்பு

நிறைவேற்றப்பட்ட அமெரிக்காவின் பிரேரணை இல்லாது செய்வதற்கு இப் போதும் முடியும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி ஜெயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசாங்கம் சர்வதேச நாடுகளுடன் ஒத்துழைத்து செயற்பட வேண்டும்.

அமெரிக்காவின் பிரேரணை மிகவும் அபாயகரமானது. இந்த பிரேரணை நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே அதனை தடுத்திருக்க முடியும்.

ஆனால்,தமக்கு இந்த பிரேரணை குறித்து அச்சமில்லை என்று மக்கள் மத்தியில் செல்வாக்கினைப் பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மார் தட்டிக் கொண்டிருக்கிறார்.

இதனால் நாட்டுக்கு மிகப்பெரிய ஆபத்து ஏற்படலாம்.

இந் நிலையில் காலம் தாழ்ந்துள்ள போதும். இந்த பிரேரணை நீர்த்துப் போக செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்றார். (2)

# இலங்கைக்கு 26 நாடுகள் ஆதரவு வழங்கியுள்ளன

26 நாடுகளும், மூன்று அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டன என ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனீவாவிற்கான இலங்கைக் காரியாலயம் அறிவித்துள்ளது.

மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளின் போது குறித்த நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டன என குறிப்பிட்டுள்ளது.

சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், கியூபா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டன.

நாடுகளுக்கு மேலதிகமாக மூன்று அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டுள்ளன. (2)

# பிக்குகளுக்கு வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கமுடியாது

## நீதிமன்றம் உத்தரவு

அனுமதிப்பத்திரத்தை பௌத்த பிக்குகளுக்கு வழங்குவது கலாசாரத்திற்கு இழுக்கு என்று இலங்கை அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே பிக்குகளுக்கு வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க முடியாது என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பௌத்த தேரர் ஒருவர் மோட்டார் வாகன திணைக்கள ஆணையாளருக்கு அனுப்பிவைத்த விண்ணப்பப் படிவத்தை நிராகரிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்துச்செய்து ரீட் கட்டளையை பிறப்பிக்குமாறு கோரி பௌத்த தேரர்கள் மூவர் தாக்கல் செய்த மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்தது.

நான்கு வருடங்களுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுக்கள் மேன்முறையீடு நீதிமன்ற நீதியரசர்களான தீபாலி விஜயசுந்தர, உபாலி குணரத்ன ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவ்விருவரும் இந்த மனுக்களை நிராகரித்தனர்.

வாகன அனுமதிப்பத்திரத்தை தேரர்களுக்கு வழங்குவது பௌத்த கலாசாரத்திற்கு இழுக்கு என்று இலங்கை அரசியலமைப்பில் குறிபபிடப்பட்டுள்ளது போல பௌத்த தர்மத்தை பாதுகாப்பதற்கு நீதிமன்றம் கடப்பட்டுள்ளது என்று அவ்விருவரும் வழங்கிய தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# வாக்காளர்களின் கருணை எனது வெற்றிக்கு காரணம்

## ஹிருணிகா தெரிவிப்பு

(கொழும்பு)

தந்தைக்கும் கிடைக்காத வகையில் தனக்கு வாக்குகள் கிடைத்தமை வாக்காளர்களின் கருணை என கொழும்பு மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்று மேல் மாகாணத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தந்தை இல்லாத பெண் என்ற ரீதியில் பெரும்பாலானோர் தன் பக்கம் பார்வையை செலுத்தியதாகவும், இதன்மூலமே இந்த வெற்றியைப் பெற்றதாகவும் ஹிருணிகா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தன்னால் இயன்றளவு மக்களுக்கு சேவை செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருசடித்தீவில் அந்தோனியாருக்கு திருவிழா



(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை-குருசடித்தீவு தூய அந்தோனியார் ஆலயத் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 7.30மணிக்கு திருவிழா திருப்பலியுடன் ஆரம்பமாகும்.

நாளை வெள்ளிக்கிழமை திருச்சிலுவைப் பாதை தியானத்துடன் திருப்பலியும் மறுதினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருவிழாவும் நடைபெறும்.

தினமும் திருவிழாத் திருப்பலி காலை 7 மணிக்கும் வழிபாடுகள் மாலை 5 மணிக்கும் ஆரம்பமாகும்.

காலை 5.30 மணியிலிருந்து பண்ணை வீதியிலிருந்து படகுச்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை தமிழர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும்

## பிரிட்டன் எம்.பி. ஜோன் ரயன் தெரிவிப்பு

**புலம்பெயர் அமைப்புக்களை தடை செய்யும் தீர்மானத்திற்கு அரசாங்கம் வெட்கப்பட வேண்டும் என குளோபல் தமிழ் போரம் தெரிவித்துள்ளது.**



யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்துமாறு விடுக்கப்பட்டு வரும் கோரிக்கைகளை முடக்கும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறு புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை தடை செய்துள்ளதாக குளோபல் தமிழ் போரம் அமைப்பின் முன்னாள் கொள்கை ஆலோசகரும், பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினருமான ஜோன் ரயன் தெரிவித்துள்ளார்.

குளோபல் தமிழ் போரம் உள்ளிட்ட 16 புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை இலங்கை அரசாங்கம் தடை செய்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய அமைப்புக்கள் என்ற வகையீட்டின் அடிப்படையில் பயங்கரவாத இயக்கங்களாக இந்த அமைப்புக்கள் அடையாளப்படுத்தப்பட்டு தடை செய்யப்பட்டுள்ளன.

மனிதவுரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணைகளை நடத்தக் கூடாது என்ற தொனியில் இவ்வாறு அமைப்புக்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைய திட்டமிட்டுள்ளதாக அரசாங்கம் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களுக்கு எந்த விதமான போதிய ஆதாரங்களும் கிடையாது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீது தடை விதிக்கப்பட்டுள்ளமை கவனிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் ஆயுத போராட்டம் இடம் பெறுவதனை எந்தவொரு தரப்பினரும் விரும்பவில்லை.

முன்னணி தமிழ் அமைப்புக்களை பயங்கரவாத அமைப்புக்களாக அடையாளப் படுத்துவதன் மூலம், புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் இலங்கையில் உள்ள சொந்தங்கள், நண்பர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் தொடர்புகளை பேண முடியாத நிலைமை ஏற்படும்.

இலங்கைக்கு விஜயம் செய்யும் புலம்பெயர் தமிழர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடலாம். குறிப்பாக புலம்பெயர் தமிழ் சமூகத்துடன் ஆக்கபூர்வமான தொடர்புகளைப் பேணுவதற்கு அரசாங்கம் நாட்டம் காட்டத் தவறியுள்ளது.

கருத்துச் சுதந்திரத்தை முடக்கும் வகையில் அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளானது நாட்டின் மனிதவுரிமை நிலைமைகளை மேலும் மோசமடையச் செய்யும் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

## பொங்கல்விழா

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல் விழா எதிர் வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பமாகி முற்பகல், பிற்பகல் வேளைகளில் வசந்தமண்டபப்பூசையை தொடர்ந்து உள்,வெளி வீதி உலா வருதல் இடம்பெறும். (2)

## உரும்பிராய் இந்துவின் பரிசளிப்பு விழா

யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் தினமும் பரிசில் நாளும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலையின் கற்பக விநாயகர் கலையரங்கில் அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைநெறி மற்றும் வணிகக்கல்வி பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சற்குணராசா, பழைய மாணவர் க.சோதிலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஸ்தாபகர் நினைவுப் பேருரையை பழைய மாணவரும் விவசாயத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற பிரதம இலிகிதருமான க.கனகரட்ணம் நிகழ்த்துவார். பரிசில்களை திருமதி சஜிதா வேல்நம்பி வழங்குவார். (2)

# வடமாகாண முதலமைச்சரின் தேர்தல் பிரசாரம் வேதனையளிக்கிறது

## தொழிலாளர் காங்.தலைவர் இராதாகிருஷ்ணன்



வடமாகாண முதலமைச்சர் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் மேல் மாகாணசபைத் தேர்தலில் பக்கச்சார்பாக பிரசாரம் செய்வார் என நாம் ஒருபோதும் எதிர்பார்த்திருக்கவில்லை. முன்னாள் நீதியரசர் என்பதையும் தாண்டி அவ்வாறான பிரசார நடவடிக்கைகளில் செயற்பட்டமையானது மிகுந்த மனவேதனையளிப்பதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் பெ. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணசபை தேர்தல் நிறைவடைந்த நிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் போட்டியிட்ட வேட்பாளர்கள், தொழிலதிபர்கள், அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் ஆகியவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் அளுத்மாவத்தையில் அமைந்துள்ள செமட்ட செவன நிலையை மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இனப் பிரச்சினைக்கான தீர்வானது அரச, தமிழ் தரப்பினரால் இழுபறியில் சென்று கொண்டிருக்கின்றது. அதனை ஜெனவாவோ அல்லது சர்வதேச நாடுகளோ இணக்கப்பாடொன்றை ஏற்படுத்த முடியாது.

இருதரப்பினருக்குமிடையில் மத்தியஸ்தம் வகித்து இணக்கப்பாட்டை ஏற்படுத்தி நிரந்தர சமாதானத்திற்கு வழிவகுக்கும் சக்தியை ஆறுமுகன் தொண்டமான் மட்டுமே கொண்டிருக்கின்றார் எனவும் இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டினார். (2)

## ரோஸ் வூட் மரக்குற்றிகளை சுங்கப்பிரிவு கைப்பற்றியது

கிழக்காபிரிக்காவிலிருந்து இலங்கையூடாக மத்திய கிழக்கிற்கு கொண்டு செல்லவிருந்த 100 கோடி ரூபா பெறுமதியான ரோஸ் வூட் மர குற்றிகளை சுங்கப்பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.


இவ்வாறு கொண்டு செல்லவிருந்த 420 மெட்ரிக் தொன் ரோஸ் வூட் மரக்குற்றிகள் அடங்கிய 28 கொள்கலன்களை ஊருகொடவத்த களஞ்சியத்திலிருந்து சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் இலங்கை சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2)

## அலங்கார உற்சவம்

அச்சுவேலி வடக்கு (சரசாளி) ஸ்ரீ சித்தி வேலாயுதர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு ஆரம்பமாகும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை புதுவருடத் தினத்தன்று தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (2)





யாழ்/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் சிறுவர் சந்தையொன்று அண்மையில் நடைபெற்றபோது... (படங்கள் :- கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைகளுக்கு ஒத்துழைக்காவிடின் ஐ.நா.அமைப்பிலிருந்து விலக வேண்டும்

### எச்சரிக்கிறார் ஹசன் அலி

ஜெனீவாவில் இலங்கை சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை செயற்படுத்த அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ தெரிவித்துள்ளது.

அமெரிக்காவினால் இலங்கை தொடர்பாக கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்த, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு பற்றி தெரிவிக்கும் போது அந்த கட்சியின் செயலாளர் நாயகம் ஹசன் அலி இதனை கூறியுள்ளார்.

ஜெனீவாவில் இலங்கை சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்த அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இலங்கையிடம் தவறில்லை என்றால் அச்சப்பட வேண்டியதில்லை.

ஜனாதிபதி இந்த தீர்மானத்தை நிராகரிப்பார் என்றால், அவருக்கு அதற்கான இயலுமை இருக்கக் கூடும்.

நவநீதம்பிள்ளை என்பவர் தனிநபர் அல்ல. இலங்கையை போல் பல நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகித்து வருகின்றன.

நவநீதம்பிள்ளை அனைத்து நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நபர். அத்துடன் இந்த தீர்மானம் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அல்ல.

இலங்கையில் உள்ள ஒருசாரார் சம்பந்தமாக மட்டும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அதில் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என அனைவரும் இருக்கக் கூடும்.

விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மாட்டோம் என இலங்கை கூறுமாயின் இலங்கை ஐக்கிய நாடுகள் அமைப்பில் இருந்து விலக நேரிடும்.

எவராவது ஒரு குற்றத்திற்காக எம்மை குற்றவாளி எனக் கூறுவாராயின், நாம் குற்றவாளியா? இல்லையா? என்பதை மேற்கொள்ளப்படும் விசாரணைகள் மூலம் தீர்மானிக்க முடியும்.

இதனால் நாம் குற்றவாளியா? அல்லது நிரபராதியா? என்பதை முடிவு செய்ய இந்த விசாரணையில் பங்கேற்க வேண்டும் எனவும் ஹசன அலி கூறியுள்ளார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



**திருமதி சின்னையா செல்லம்மா**

பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா செல்லம்மா கடந்த 31 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி மகாலிங்கம் சரோஜினிதேவி**

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Grevenbroich ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சரோஜினிதேவி கடந்த 31 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 9 மணிக்கு Friedhofskapelle Elsen, Deutsch - Ritter-Allee 38, 41515 Grevenbroich, Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



**தம்பியப்பா செல்லத்துரை**

வேலணை மேற்கு சிற்பனை முருகன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா செல்லத்துரை கடந்த 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**திருமதி சொக்கலிங்கம் கண்மணி**

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் லண்டன் Coventry ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் கண்மணி கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு Indian Community Centre, 243 Cross Rd, Coventry CV6 5GP, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

# ஜெனீவா தீர்மானம் நிறைவேறிய பின்னர் எதிர்ப்பதென்பது முட்டாள்தனமான விடயம்

## மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு



**ஜெனீவா பிரேரணையை அரசாங்கம் நிராகரித்தாலும் பிரேரணை நிறைவேறப் போவது உறுதியே. மனிதவுரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் மாற்று வேலைத் திட்டங்களை மேற்கொள்ள முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

ஜெனீவா பிரேரணையை நிராகரிப்போம் என்ற அரசாங்கத்தின் கருத்துத் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபை தேர்தலில் வெற்றிகொள்ளவே அரசாங்கம் ஜெனீவா பிரேரணையில் தோற்றுள்ளது. தனது சுயநலத்திற்காக சர்வதேசத்திடம் இலங்கையை காட்டிக் கொடுத்து விட்டனர் எனவும் அவர் அரசாங்கத்தை குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகளினால் நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையை அரசாங்கம் செயற்படுத்தியாக வேண்டும். அரசாங்கம் இப் பிரேரணையை ஏற்காவிட்டாலும் இலங்கைக்கு எதிராக ஜெனீவா பிரேரணை நிறைவேறப் போவது உறுதியே.

அரசாங்கம் மக்களை ஏமாற்றி தமது இருப்பினை தக்கவைத்துக் கொள்வதற்காக பொய்யாக கருத்துகளையும், வீண் சவால்களையும் விடுக்கின்றது.

பிரேரணையை அரசாங்கம் எதிர்க்குமாயின் நாட்டிற்கு எதிராக வேறு விதத்தில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும். அதற்கு அரசாங்கம் முகம்கொடுக்க முடியாது.

குறிப்பாக பொருளாதாரத் தடைகள் இலங்கைக்கு எதிராக விதிக்கப்படுமாயின் நாட்டில் நிலைமையை பெரிதும் பாதிக்கும். அதேபோல் ஜெனீவாவில் பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர் அதனை எதிர்ப்பதென்பதும் முட்டாள்தனமான விடயமே.

சர்வதேச கூட்டங்களை எதிர்த்து அதற்தேற்ற பிரேரணையில் மாற்று வேலைத்திட்டங்களை கொண்டு வருவதென்பது சாத்தியமற்ற காரியமாகும். அதனை அரசாங்கம் ஒரு போதும் செய்ய முடியாது.

மேலும், இன்று அரசாங்கம் எதிர்க்கருத்துகளை குறிப்பிட்டு வருவதும், வீர வசனங்கள் பேசுவதும் மக்களை ஏமாற்றுவதற்காகவே தவிர, வேறெந்த செயற்பாட்டிற்காகவுமில்லை.

குறிப்பாக இம்முறை மாகாண சபை தேர்தலில் வெற்றி பெறுவதற்காகவே அரசாங்கம் ஜெனீவா பிரேரணையை தோற்றது. அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு எதிராக அந்த நாடுகள் செயற்பட்டது என்பது தெரிந்தும் நம் நிலை வகித்த நாடுகளை தம பக்கம் ஈர்க்க அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஏனைய அமைப்புகள் பிரேரணையை வெற்றிகொள்ள தொடர்ந்து முயற்சித்த நிலையில் அரசாங்கத்தினர் மக்களை தம்பக்கம் ஈர்த்து தேர்தலை வெற்றிகொள்வதற்காகவே ஈடுபட்டனர்.

ஜெனீவா பிரேரணை கொண்டு வரப்பட்ட காலத்தில் மின்சாரக்கதிரை கதைகளை நாட்டிற்கு பாதிப்பு என்றும் மக்களை ஏமாற்றிவிட்டு தற்போது மாற்று நடவடிக்கை தொடர்பில் பேசுகின்றனர்.

இலங்கையில் மூவின மக்களையும் ஒன்றிணைத்து ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தும் வழியை அரசாங்கம் கையாள வேண்டும். இனியும் நாட்டில் பிரிவினை வாதத்தையும், மதவாதங்களையும் தூண்டி மனிதவுரிமை மீறல்களை செய்யக்கூடாது.

இம்முறை மகாண சபை தேர்தல் அரசாங்கத்திற்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எச்சரிக்கையாகவே அமைந்துள்ளது.

மக்கள் அரசாங்கத்தை நம்பவில்லை என்றும், அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களிலும் திருப்தியில்லை என்பதும் இம்முறை தேர்தலில் வெளிப்பட்டுவிட்டது. இனியும் அரசாங்கத்தின் பொய்கள் பலிக்காது எனவும் அவர் தெரிவித்தார். (2)

# ஜெனீவா தீர்மானம் அமெரிக்க உறவில் விரிசலை ஏற்படுத்தாது

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானம், இலங்கை மற்றும் அமெரிக்கா இடையிலான பாதுகாப்பு உறவுகளை பாதிக்காது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான பாதுகாப்பு பரிமாற்றங்கள் பல வருடங்களாக இருந்து வருவதாக பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களிடம் நேற்று கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை இராணுவத்தினர் அமெரிக்கா பல பயிற்சிகளை வழங்கி வருகிறது. இந்த பயிற்சித் திட்டங்கள் அரசியல் பிரச்சினைகளால் பாதிக்கப்படவில்லை.

இலங்கை பாதுகாப்பு அமைச்சு மற்றும் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் இணைந்து வழங்கும் 24 ஆவது பாதுகாப்பு பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம் கொழும்பில் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான நகர்வுகளை மேற்கொண்டதன் காரணமாகவே பல புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டை இராணுவப் பேச்சாளர் மறுத்துள்ளார்.

இந்த அமைப்புகள் மேற்கொண்டு வந்த சில நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட சட்டப் பிரச்சினைகளாலேயே அமைப்புகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பு நலன் கருதியே மேற்படி 16 அமைப்புகள் தடை செய்யப்பட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (2)

# வருடப்பிறப்பு விழா

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான ஜய வருடப்பிறப்பு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு 108 கலச சங்காபிஷேகமும் காலை 7.36 மணிக்கு புதுவருட பிறப்பு காலை சந்திபூசையும் தொடர்ந்து 8 மணிக்கு சங்கிராந்தி தீர்த்தமும் நடைபெறும்.

அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு உச்சிக்காலபூசையும் மாலை 4.30 மணிக்கு சாயரட்சைபூசையைத் தொடர்ந்து ஸ்ரீ சக்கர பூசையும் நடைபெறும். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான சேவை இடைநிறுத்தம்

(பேர்லின்)

ஜேர்மனியில் லூப்தான்சா விமான நிறுவன விமானிகளின் வேலைநிறுத்தம் காரணமாக 900 விமானங்கள் இரத்து செய்யப்பட்டன.

இது குறித்து லூப்தான்சா விமான நிலைய செய்திதொடர்பாளர் பர்பரா கூறுகையில்.

நேற்று 900 விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் 3 ஆயிரத்து 800 விமானங்கள் இரத்து செய்யப் படவுள்ளதால் 4 இலட்சத்து 25 ஆயிரம் பயணிகள் பாதிக் கப்படுவார்கள் என்றார்.

நீண்ட காலமாக இருந்த ஊதிய உயர்வு பிரச்சினை காரணமாக நேற்று புதன், இன்று மற்றும் நாளை, விமானிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்று விமானிகள் சங்கம் அறிவித்துள்ளது. (2)



நைஜீரியாவில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 21 பேர் பலியாகினர். இராணுவத்தினர் நான்கு வாகனங்களில் வந்த போது இந்த பயங்கர தாக்குதல் நடந்துள்ளது. தாக்குதலில் நான்கு இராணுவ வாகனங்களும் முற்றிலுமாக சேதமடைந்தன.

# காலநிலை மாற்றத்தால் போர் மூளும் அபாயம்

## ஐ.நா. எச்சரிக்கை



ஆசிய நாடுகளில் வானிலை மாற்றத்தின் காரணமாக ஏற்படும் பிரச்சினைகளால் போர் மூளும் அபாயம் உள்ளதாக ஐ.நா. எச்சரித்துள்ளது.

ஐ.நா. வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் குடிநீர் பற்றாக்குறை, உணவு உற்பத்தி பாதிப்பு போன்றவற்றால், இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு இடையே போர் மூளும் அபாயம் உள்ளதாக எச்சரித்துள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், கால நிலை மாற்றத்தின் காரணமாக, ஆசிய நாடுகளில் வாழும் மனிதர்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இயற்கை வளங்களும் குறையும். அதனால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டிய மோசமான நிலை ஏற்படும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# காணாமற்போன வானூர்தி குறித்து குற்றவியல் விசாரணை ஆரம்பம்

(கோலாலம்பூர்)

மலேசியன் ஏர்லைன்ஸின் எம்.எச் 370 விமானம் காணாமற்போனது தொடர்பாக மலேசியா பொலிஸ் அதில் பயணம் செய்த சிப்பந்திகளையும், விமானிகள் பற்றியும் தனது குற்றவியல் விசாரணையை தொடங்கியுள்ளது.

தேசிய தலைமை காவல் அதிகாரி அபு பக்கர் நேற்று செய்தியாளர்களை சந்தித்து பேசியபோது கூறுகையில்,

பயணிகள் எவரேனும் விமானத்தை கடத்தினார்களா? அல்லது ஏதேனும் நாச வேலை நடந்துள்ளதா, அல்லது தனது விருப்பு வெறுப்புக்கு ஏற்றவாறு நடந்து விமானத்தை திசைதிருப்பியுள்ளார்களா என்ற கோணத்தில் விசாரணையை தொடங்கியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும் அதில் இயந்திரக் கோளாறு காரணமாக விபத்து ஏற்பட்டிருக்குமோ என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்படுகிறது. மேலும் விபத்து ஏற்பட்டிருப்பின் அதற்கான தடயங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தெற்கு இந்திய பெருங்கடலில் விமானத்தின் கறுப்புப் பெட்டியை தேடும் பணி தீவிரமடைந்துள்ளது. (2)

# பாக்.இல் பட்டம் விடுபவர்கள் மீது கைது நடவடிக்கை

(பைசலாபாத்)

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் கடந்த நான்கு வருடங்களாகப் பட்டம் பறக்கவிடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பட்டம் பறப்பதற்குப் பயன்படுத்தப்படும் நூல்கள்ஏனைய பட்டங்களை அறுக்கவேண்டி நொறுககப்பட்ட கண்ணாடித் துகள்களைப் பசையுடன கலந்து பூசி முறுக்கேற்றப்படுவது வழக்கம்.

ஆனால் இந்த பட்டங்கள் பறக்கும்போது எதிர்பாராதவிதமாக இந்த நூலினால் கழுத்து அறுபட்டு பலியானவர்களின் எண்ணிக்கை அங்கு அதிகரித்தது.

இதனைத் தொடர்ந்தே அங்கு பட்டம் பறக்க விடப்படுவது தடை செய்யப்பட்டுள்ளதாக பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன.

அதுபோல் அங்கு பிரபல பொழுதுபோக்காகக் கருதப்படும் இந்த காற்றாடி விளையாட்டினை தங்கள் குழந்தைகளிடம் நிறுத்தும்படி பெற்றோர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலும் கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் பைசலாபாத் நகரத்தில் பட்டம் பறக்க விட்டதனால் பன்னிரெண்டுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், ஆயிரக்கணக்கான பட்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இஸ்லாமியத் தீவிரவாத இயக்கமான ஜமாத்-உட்-தவா இத்தகைய கொண்டாட்டங்கள் இஸ்லாமிய விதிகளுக்குப் புறம்பானவை என்று சென்ற வருடம் எச்சரித்ததைத் தொடர்ந்தும் வசந்த காலத் திருவிழாவை வரவேற்கும் வண்ணம் காற்றாடிகளைப் பறக்க விடும் வழக்கம் அங்கு தடை செய்யப்பட்டுள்ளதாகவும் பாகிஸ்தான் செய்தி நிறுவனம் குறிப்பிடுகின்றது. (2)

# பண்ருட்டியில் 50 வீடுகள் தீப்பற்றி எரிந்து நாசம்

(பண்ருட்டி)

பண்ருட்டியில் தீ விபத்தில் 50 குடிசை வீடுகள் எரிந்து சாம்பலாகின.

இவ் விபத்து நேற்று காலை 11 மணிக்கு பண்ருட்டி ரயில்வே காலனி பகுதியில் நடைபெற்றது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

ஒரு குடிசை வீட்டில் திடீரென தீப்பிடித்தது. காற்றின் வேகத்தில் பக்கத்து வீடுகளுக்கும் தீ மள....மள.... வென பரவியது. உடனே அந்த வீடுகளில் வசித்தவர்கள் அலறியடித்து கொண்டு வெளியே ஓடி உயிர் தப்பினர்.

தீ விபத்தில் 2 வீடுகளில் இருந்த சிலிண்டர்கள் வெடித்து சிதறின. இதனால் தீ மேலும் உக்கிரமாக பரவத் தொடங்கியது.

இதுபற்றி தகவல் அறிந்தவுடன் 6 வாகனங்களில் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தண்ணீரை பீய்ச்சியடித்து தீயணைக்கும் பணியில் ஈடுபட்டனர். சுமார் 2 மணி நேரம் போராடி தீ பரவாமல் தடுத்து அணைத்தனர்.

தீ விபத்தில் சுமார் 50 வீடுகள் எரிந்து சாம்பலாகின. எனினும் அதிர்ஷ்டவசமாக யாரும் உயிரிழக்கவில்லை.

இத் தீ விபத்துக்கான காரணம் என்ன? என பண்ருட்டி பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். (2)

# இந்திய - பாக். எல்லையில் 27 கிலோ ஹெரோயின் மீட்பு

(அபோஹர்)

பஞ்சாப் மாநிலம், கான்பூர் அருகேயுள்ள இந்திய - பாகிஸ்தான் எல்லைப்பகுதியான அபோஹரில் நேற்றுமுன்தினமிரவு எல்லைப் பாதுகாப்பு படையினர் வழக்கம் போல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது இந்திய எல்லைப் பகுதிக்குள் சிலர் ஊடுருவ முயன்றதை கவனித்த இந்திய வீரர்கள், அவர்களை சரண் அடைந்து விடுமாறு எச்சரித்தனர்.

அதனை பொருட்படுத்தாத பாகிஸ்தானியர்கள் இந்திய வீரர்களை நோக்கி துப்பாக்கியால் சுட ஆரம்பித்தனர்.

எல்லைப் பாதுகாப்பு படையினரும் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்த தாக்குதலை தாக்குப் பிடிக்க முடியாத பாகிஸ்தானியர்கள் வந்த வழியே திரும்பி ஓடி இருட்டில் மறைந்தனர்.

அவர்கள் ஊடுருவ முயன்ற பகுதிக்கு சென்று சோதனையிட்டதில் 27 கிலோ ஹெராயின், 1/2 கிலோ கஞ்சா, 2 கைத் துப்பாக்கிகள், 42 தோட்டாக்கள், 2 செல் போன் மற்றும் ஒரு பாகிஸ்தான் சிம் கார்ட் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

இதன்போது கைப்பற்றப்பட்ட ஹெரோயினின் சர்வதேச மதிப்பு 135 கோடி ரூபாய் என்று தெரிவித்தனர். (2)

# ஒபாமாவை கொலைசெய்ய முயன்ற நபருக்கு கடுங்காவல் சிறைத்தண்டனை

## பெடரல் நீதிமன்றம் உத்தரவு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை கொலை செய்ய முயன்ற நபருக்கு வோஷிங்டன் பெடரல் நீதி மன்றம் 25 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

அமெரிக்காவில் வோஷிங்டன் நகரை சேர்ந்தவன் ஆஸ்கர்ரமரோ ஒர்டெகா ஹெர்னான்டஸ் கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வோஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகை மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டான்.

எனவே அவனை பொலிஸார் கைது செய்து விசாரித்தபோது ஜனாதிபதி ஒபாமாவை கொலை செய்யும்படி கடவுள் தன்னிடம் கூறியதாக அவனது நண்பர்களிடம் கூறியது தெரிய வந்துள்ளது.

எனவே அவன் ஒபாமாவை கொலை செய்ய முயன்றதாக பொலிஸார் வழக்கு தொடர்ந்தனர்.

முன்னதாக இவனுக்காக வாதாடிய நீதிபதிகள் இவன் மனநிலை பாதிக்கப் பட்டிருப்பதாகவும் எனவே 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கும்படியும் கேட்டுக் கொண்டனர். ஆனால் அதை ஏற்க நீதிபதி மறுத்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான மனிதன் எப்போதும் அறம் பற்றியே சிந்திக்கிறான். பாமர மனிதன்தன் சுகம் பற்றியே எண்ணுகிறான். - *கன்பூஷியஸ்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இன, மத பேதமின்றி அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்க வேண்டும்

## அமைச்சர் டெனிஸ்வரன் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

அரசியல் சூழ்ச்சிகளுக்கப்பால் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என வட மாகாண மீன்பிடி போக்குவரத்து கிராம அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா. டெனிஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் நிர்வாகம் நீண்ட காலமாக இயங்கி வருவதனால் இந்த நிர்வாகத்தினை மாற்றியமைத்து புதிய நிர்வாகம் ஒன்றினை அமைத்து சிறப்பான சேவை ஒன்றினை வழங்க ஆவன செய்யுமாறு சங்க அங்கத்தவர்கள் கோரியதற்கமைவாக முன்னைய தலைவர் கனகரத்தினம் தலைமையில் பொதுக் கூட்டமானது முல்லைத்தீவு மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த 30ஆம் திகதி இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

தனியார் போக்குவரத்துச் சங்கம் முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை மாணவர்களை இலவசமாக ஏற்றி இறக்குவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அவர்களுக்கு தனது விசேட நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட மிக முக்கியமான இடமாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுவதனால் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் போது இன, மத, பேதமின்றியும் அரசியல் தலையீடுகள் இன்றியும் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், மாகாண சபை உறுப்பினர்களான அ.ரவிகரன், அன்ரனி ஜெகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பல்வேறுபட்ட விடயங்கள் ஆராயப்பட்டதுடன், புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

இதில் தலைவர்களாக இரண்டு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டதால் பின்னர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டார். ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்கள் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். (2-6)

## இயற்கையைப் பாதுகாக்க மனமாற்றம் வேண்டும்

இந்து சமயம் கடுமையான அர்த்தம் உடையது. அந்தச் சமயத்தை யாரேனும் விமர்சிப்பவர்களாக இருப்பார்களாயின் அவர்களின் மன நிலை குறித்து ஆராயவேண்டும் என்பதே நம் தாழ்மையான கருத்து.

இந்துக்களின் தொன்மையான வாழ்க்கை முறையை எடுத்து நோக்கினால் அங்கு இயற்கையைத் தெய்வமாக வழிபட்ட சான்றாதாரங்கள் தெரியவரும்.

இயற்கையில் உள்ள சூரியனை, சந்திரனை ஏனைய கிரகங்களை, மரங்களை, நதிகளை, மலைகளை, பூமித்தாயை தெய்வமாக வழிபட்ட மரபுக்குள் இயற்கையைப் பேணுவது மனித வாழ்வுக்கு இன்றியமையாதது என்ற உண்மை தெரியவரும்.

இப்போதெல்லாம் இயற்கையின் சீற்றமும் அதன் ஒழுங்கீனமும் மனித இனத்தின் வாழ்வுக்குப் பேராபத்தாக அமைந்துள்ளது.

ஆக, இயற்கையைப் பேணப்பழகுவது மிகவும் முக்கியமானது. அவ்வாறு இயற்கையை பேணுவதாக இருந்தால், மக்கள் இயற்கையைத் தெய்வமாக வழிபடவேண்டும். ஒரு மரத்தை தறிப்பதாக இருந்தால் அதன் இழப்பை ஈடு செய்யும் மாற்றுவழிபற்றிச் சிந்திப்பது அவசியம். ஆனால், நாங்கள் மரம் தறிப்பதில் காட்டிய ஆர்வத்தை மரநடுகையில் காட்டவில்லை.

இதுபோல், எங்கள் சுற்றுச்சூழல் பற்றி ஒரு கணம் சிந்தித்தால், கட்டாந்தரையில் நின்று கதறி அழ வேண்டும்போல் நிலைமை இருக்கும். அந்தளவிற்கு சுற்றுச்சூழல் குறித்து அக்கறைப்பாடு எங்களிடம் இம்மியும் கிடையாது எனலாம்.

வீட்டுக் கழிவுகளை உரைப்பைகளில் கட்டி அவற்றை தூக்கி வந்து வீதியில் போட்டுவிட்டுப் போக, தெரு நாய்கள் அவற்றை பங்கு போட்டுப் பிரித்து, பிரித்த பங்கில் ஏற்றத்தாழ்வு போல நாய்கள் கோஷ்டிச் சண்டை இட்டு அந்த வீதி முழுவதையும் சிதலம் செய்து விடுகின்ற அநியாயத்தைப் பார்க்கும்போது நெஞ்சு வெடித்துவிடும் போல் இருக்கும்.

எங்க்ள் வீட்டுக் குப்பைகளை நாங்களே அகற்றுதல் என்ற நியாயத்தை ஒவ்வொருவரும் கடைப்பிடித்தால் எங்கள் சுற்றுச் சூழல் எவ்வளவோ தூய்மையாக இருக்கும்.

சுற்றுச் சூழலில் தூய்மை என்பது எங்கள் ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானதென்ற உண்மைநிலை அனைவருக்கும் நன்கு தெரிந்ததே.

இருந்தும் எங்களிடம் நடத்தை மாற்றம் ஏற்படாமையால் சுற்றுச்சூழல் பராமரிப்பு என்பது படுமோசமாகி வருகிறது. இத்தகைய நிலைமையை இப்படியே நகரவிட்டால் எங்கள் இளம்பிள்ளைகளும் இதே பழக்கத்தைப் பின்பற்றுவர்.

அவ்வாறாயின் எங்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது எக்காலத்திலும் நிமிர முடியாத-நிமிர்த்தமுடியாத விடயமாகவே இருக்கும்.

ஆக, எங்கள் சூழலை நாங்களே பாதுகாக்க வேண்டும் என்ற கோஷம் பொதுமக்கள் முதல் பாடசாலை மாணவர்கள் வரை எழுச்சி பூர்வமாக ஏற்படுத்தப்படுவது அவசியம்.

எனது வீட்டுக் குப்பையை வீதியில் கொட்டுவதால் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும் என்ற உண்மை, மனச்சாட்சியை தொடும்படியாக உணரவைப்பது அவசியம்.

நாம் வாழும் இயற்கையை நாம் காப்பாற்றத் தவறினால் அதுவே எங்களின் ஆயுளுக்கு முடிவு கட்டும் என்பதை உணர்ந்து இயற்கையை இறைவனாக வழிபட்டு எங்கள் வாழ்வைப் பசுமையாக்க அனைவரும் முன்வருவது காலத்தின் கட்டாயமாகும்.

## 14 பல்கலை.மாணவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு

(கொழும்பு)

மிரிஹான பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 14 மாணவர்களை நாளை 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் காவலரணை தாக்கி சேதப்படுத்தியமை மற்றும் பாதுகாப்பு அதிகாரி ஒருவரை தாக்கியமை தொடர்பாக மாணவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் நேற்று முன்தினம் நுகேகொட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சம்பவம் குறித்து விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் அதுவரை மாணவர்களை விளக்கமறியலில் வைக்குமாறும் பொலிஸார் கேட்டுக் கொண்டனர்.

இதனையடுத்து சந்தேக நபர்களான மாணவர்களை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (2)

## துவஜாரோகண விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்ரீசந்திரசேகர விநாயகர் தேவஸ்தான வருடாந்த துவஜாரோகண விழா எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளன.

இதில் எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் தொடர்ந்து சப்பறத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

தினமும் பூஜைகள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணி வரை நடைபெறும்.

அதன்பின்னர் மாலை 5.30 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி இரவு 9 மணி வரை இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (2)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி முறிகண்டி பிள்ளையார் ஆலய சதுர்த்தி உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு விசேட பூஜைநடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2)

## சித்திரை புத்தாண்டு இன்னிசை இரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகம், யாழ் பாதுகாப்புப் படைக் கட்டளைத் தலைமையகம், யாழ்.பொலிஸ் நிலையம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள தமிழ்-சிங்கள சித்திரைப் புத்தாண்டு விழா மற்றும் இன்னிசை இரவு நிகழ்வு நாளை மறுதினம் 5ஆம் திகதி காலை 10 மணிமுதல் நாள் முழுவதும் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் மாலை 7 மணியிலிருந்து ஏசியன் தமிழ் இசைக் குழுவுடன் நாட்டின் பிரபல நடனக் குழுக்கள் கலந்து கொள்ளும் இன்னிசை இரவு நடைபெறும்.

அத்துடன் சைக்கிளோட்டம் (ஆண் - பெண்), மரதன் ஓட்டம், சறுக்கு மரம் ஏறுதல், கயிறு இழுத்தல், தலையணை சண்டை, முட்டி உடைத்தல், புத்தாண்டு அழகன்-அழகித் தெரிவு உட்பட மேலும் பல போட்டிகளும் நடைபெறவுள்ளதாக பலாலி பாதுகாப்பு படை கட்டளைத் தலைமையக ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (அ)

## சத்திய தரிசனம்



கடவுளுக்கும் பக்தனுக்கும் இடையே எப்போதும் நெருங்கிய தொடர்பு உண்டு. தனது பக்தனுக்கு தீங்கிழைக்கப்பட்டால் கடவுளுக்கு பொறுக்காது. நிச்சயம் அவனை மன்னிக்கமாட்டார். கடவுள் தன்னையே கூட மதிக்காமல் தவறு செய்தவனை மன்னிக்கலாம். ஆனால் தன் அடியவனுக்கு தீங்கு செய்பவனை தெய்வம் நிச்சயம் மன்னிக்காது.

ஒருவன் தெய்வீகம் அடைய வேண்டுமானால் முதலில் அவனது தவறுகளை மறப்பதை நிறுத்த வேண்டும். அதுமட்டுமல்ல அடுத்தவர் தவறை மிகைப்படுத்துவதையும் தவிர்க்கவேண்டும். அடுத்தவரிடம் இருக்கும் தவறைத் தேடியலைதல் தவறு. அதற்குப் பதில் உன்னிடம் இருக்கும் சிறிய தவறுகளைத் தேடிக் கண்டுபிடி. அடுத்தவரிடம் இருக்கும் குறைகள் எவ்வளவுதான் பெரிதாக இருந்தாலும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்காதே.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பரிமாறும் முறைமை

உண்ணும் தட்டு அல்லது இலையில் முதலிற் காய்கறிகளோ, அப்பளமோ அல்லது உப்போ பரிமாறாமல் முதலில் சோற்றைப் பரிமாறக்கூடாது. உண்பவரின் இடது கைப்பக்கம் இலையின் நுனிப்பாகமும் வலது கைப் பக்கம் இலையின் அடிப்பாகமும் இருக்கும்படி இலை போடவேண்டும்.

இலையிற் காய்கறிகள் பரிமாற ஆரம்பிக்கும்பொழுது உப்பை வைக்க வேண்டும். சாப்பிடுபவர் உணவை உண்ண ஆரம்பிக்கும்முன் நெய் பரிமாற வேண்டும். உண்பவர் உணவை எச்சில் செய்தபின்பு நெய், உப்பு ஆகியவற்றைப் பரிமாறக்கூடாது. வலது கையாற் சாப்பிட்டுக்கொண்டே இடது கையால் நெய், உப்பு பரிமாறக்கூடாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தாச்சிப் போட்டி

உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுமதியுடன் நடத்தி வரும் தாச்சி போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.


உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வரும் இப் போட்டிகளின் அரையிறுதிப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதன்படி முதலாவது அரையிறுதிப் போட்டி இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

இப் போட்டியில் தாவடி காளியம்பாள் அணியும் அளவெட்டி கிழக்கு பாரதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

நாளை இடம்பெறவுள்ள மற்றைய அரையிறுதிப் போட்டியில் புதுமடம் வைகறை அணியும் மயிலிட்டி வள்ளுவர் அணியும் மோதவுள்ளன. (க-23)

# இளைஞர் மாநாட்டை முன்னிட்டு சைக்கிள் ஓட்டம் யாழில் நேற்று ஆரம்பம்



மே மாதம் இலங்கையில் இடம்பெறவுள்ள உலகளாவிய இளைஞர் மாநாட்டை முன்னிட்டு சைக்கிள் ஓட்ட நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தேசிய இளைஞர் மாநாடு தொடர்பிலான விழிப்புணர்வு ஒன்றினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய இளைஞர் கழக சம்மேளனம், இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சு ஆகியனவற்றின் ஏற்பாட்டில் சைக்கிள் ஓட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் மாதம் 6, 7, 8 ஆம் திகதிகளில் இளைஞர் மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது. இதற்காக ஆரம்பிக்கப்பட்ட சைக்கிள் ஓட்டமானது யாழ்ப்பாணத்தில் இருந்து மகரகம தேசிய இளைஞர் நிலையம் வரை சென்றடையவுள்ளது.

அந்த வகையில் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதான முன்றலில் இருந்து ஆரம்பித்த சைக்கிள் ஓட்டத்தை நேற்று காலை 8 மணியளவில் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்பித்த சைக்கிள் ஓட்டம் வவுனியா வரை சென்று முடிவடையும். இன்று மதவாச்சியில் இருந்து ஆரம்பமாகும் என்றும் குறித்த சைக்கிள் ஓட்டமானது 5 நாட்கள் இடம்பெறும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தபோட்டியில் தமிழர் ஒருவர் உட்பட 125 இற்கும் மேற்பட்டவர்கள் பங்குகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-23)

## மீண்டும் களத்தில் கெவின்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி ஆட்டக்காரர் கெவின் பீட்டர்சன் ஆஷஸ் தொடரில் மோசமான தோல்வி அடைந்ததை தொடர்ந்து அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

பீட்டர்சன் தற்பொழுது கரீபியன் நாட்டில் இந்த வருடம் நடைபெறும் கரீபியன் பிறீமியர் லீக் போட்டியில் விளையாட அனுமதி கிடைத்ததையடுத்து 2 வாரம் மேற்கிந்திய தீவுகளுக்கு செல்கிறார்.

ஏற்கனவே சர்ரேவின் கட்டுப்பாடு காரணமாக மூன்று போட்டிகள் சென்றுவிட்ட நிலையில் ஒகஸ்ட் 3 ஆம் திகதி நடக்கவிருக்கும் காலிறுதி மற்றும் ஒகஸ்ட் 20 ஆம் திகதி நடக்கவிருக்கும் கடைசி போட்டியிலும் விளையாடவுள்ளார்.

ஊடகங்களுக்கு பதிலளித்த அவர், இந்த வருடம் நடைபெறும் கரீபியன் பிறீமியரின் போட்டியில் விளையாடுவதில் நான் மகிழ்ச்சியாக உள்ளதாகவும், கரீபியனில் இருபது - 20 கிரிக்கெட் போட்டியை விளையாடிய சிறப்பான நினைவுகள் உள்ளன எனவும் கூறினார்.

தனித்துவமான மற்றும் திகில் சூழலை உருவாக்கும் கரீபியன் ரசிகர்கள் முன்னிலையில் விளையாடுவதற்காக நான் காத்திருக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். (க)

## வலய பாடசாலைகளுக்கிடையிலான கபடி; அனலைதீவு சதாசிவ ம.வித்தியாலயம் முதலிடம்



தீவக வலய பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதிற்குட்பட்ட கபடி விளையாட்டுப் போட்டியில் யா/அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டத்திலான போட்டியில் பங்குபெறத் தகுதி பெற்றுள்ளது.

அதிபர் இராதாகிருஸ்ணன், ஆசிரியர் அனுராஜ் மற்றும் மாணவர்களைப் பயிற்றுவித்தவர்களான பாடசாலையின் பழைய மாணவர்கள் வை.தனேஸ், த.கோகுலராஜ் ஆகியோரின் பயிற்றுவிப்பிலேயே இவ் வெற்றி பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க-23)














தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் வருடாந்த இளைஞர் விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றபோது...

(படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வலி.வடக்கு பிரதேச சபைத் தீர்மானம்

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கடும் கண்டனம் தெரிவிப்பு

(கொழும்பு)

சுகாதார வைத்திய அதிகாரிக்கு எதிராக வலி.வடக்கு பிரதேச சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் செயலாளர் டாக்டர் சமன் அபேவர்த்தன விடுத்த கண்டன அறிக்கை இங்கு அப்படியே தரப்படுகின்றது.

01.04.2014 அன்று பத்திரிகைகளில் வெளியான வலி.வடக்கு பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிக்கு எதிரான தீர்மானம் தொடர்பாக அரச மருத்துவ அதிகாரிகளின் தாய்ச் சங்கத்தினராகிய நாம் கடும் கண்டனத்தினையும் அதிருப்தியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச சபையில் கடமையாற்றிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சுகாதார வைத்திய அதிகாரியை மிரட்டியதும் இதனையடுத்து வெற்றிடங்கள் இல்லாமல் முறையற்ற முறையில் கடமையாற்றிய மூன்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுகாதாரத் திணைக்களத்தினாலும் உள்ளூராட்சித் திணைக்களத்தினாலும் சுகாதாரத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டதும் நாம் அறிந்ததே. மாற்றலாகும் உத்தரவு வழங்கப்பட்ட பின்னரும் கடமைக்குத் திரும்பாத பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆளுநரின் உத்தரவின் பின்னர் கடமையேற்றிருந்தனர். இதன் பின்னர் இவர்களுக்கு ஆதரவாக ஏனைய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களது கோரிக்கைகள் நியாயமற்ற நிலையில் வேலைநிறுத்தப் போராட்டமானது தீர்க்கப்படாமலேயே ஏறத்தாழ ஒரு மாத காலமாக நடைபெற்று வருகிறது.

குறிப்பிட்ட சில காலமாக மேற்குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாகவும் சுகாதார வைத்திய அதிகாரிகளது பணிகள், அதிகாரங்கள் தொடர்பாகவும் பல்வேறு பொய்யான, பிழையான தகவல்கள் வெளியாகிய வண்ணம் இருக்கின்றன. இந்த வரிசையில் 01.04.2014 அன்று பத்திரிகைகளில் வலி.வடக்கு பிரதேச சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டதாகவும் அதில் சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசத்திற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றாத, மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளாத ஒருவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன். குறிப்பிட்ட சுகாதார வைத்திய அதிகாரியை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள் கடும் கண்டனத்திற்குரியவையாகும். குறிப்பிட்ட சுகாதார வைத்திய அதிகாரியானவர் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த இரண்டு வருடங்களாகக் கடமையாற்றி வருகின்றார். இவர் மிகுந்த கடமையுணர்வுள்ள, கர்ப்பிணித் தாய்மார்கள் குழந்தைகளின் நலனில் மிகுந்த அக்கறையுள்ள ஒருவராவார். இவரது கடமைக் காலத்தில் இப் பிரதேசத்தில் டெங்கு நோயானது பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டதுடன் இவர் பல புதிய சிந்தனைகளுடன் பல்வேறு சுகாதாரம் சார்ந்த செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

இவரது பணிகள் மாவட்ட மற்றும் மாகாண மட்ட சுகாதாரக் கூட்டங்களில் பாராட்டப்படுவது யாவரும் அறிந்ததே. போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் உணவு கையாளும் நிலையங்கள் மீது கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடான சுகாதாரம் சார்ந்த நடைமுறைகளால் சில பிரதேச சபை உறுப்பினர்களின் உறவினர்களின் உணவகங்களும் உள்ளடங்கப்பட்டதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

இத் தீர்மானத்தில் சுகாதார வைத்திய அதிகாரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தனிப்பட்ட நலன்களைக் கருதி சுமத்தப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளாகும். மேலும் சாதாரண தொழிலாளியினை பதவியில் இருந்து மாற்றுவது போல் சுகாதார வைத்திய அதிகாரி மீது தீர்மானம் கொண்டு வருவது மிகவும் நகைப்பிடமான ஒரு விடயமாகும்.

வைத்தியர்களது இடமாற்றமானது மத்திய அமைச்சினாலேயே நடைமுறைப்படுத்தப்படுவது இவர்கள் அறியாமல் இருப்பது ஆச்சரியமானது. இவ்வாறான கேலிக்குரிய தீர்மானங்கள் குறிப்பிட்ட பிரதேச சபை உறுப்பினர்களின் பிரதேச சபை தொடர்பான அறிவின்மையினையும் முதிர்ச்சியின்மையையும் காட்டி நிற்கின்றன. சாத்தியமற்ற கோரிக்கைகளுக்காகத் தீர்மானங்கள் நிறைவேற்றுவதும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினர்கள் மக்கள் நலனுக்கு எதிராகவும் குறுகிய நலன் கொண்டும் நடப்பதும் மிகவும் கவலை தரும் விடயங்களாகும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

இதேவேளை மேற்படி சுகாதார வைத்திய அதிகாரிக்கு எதிராக வலி. வடக்கு பிரதேச சபை எடுத்த தீர்மானத்தைத் கண்டித்து அப்பகுதியில் உள்ள பல்வேறு பொது அமைப்புக்களும், பொது மக்களும் தங்களது கண்டனங்களை தெரிவித்து ஒப்பமிட்ட கடிதங்களை வலம்புரிக்கு அனுப்பி வைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ரு)




இருபது-20 உலகக் கிண்ண போட்டியின் அரையிறுதி ஆட்டம் டாக்காவில் நடைபெறவுள்ள நிலையில் அதற்காக பயிற்சியில் ஈடுபடும் தென்னாபிரிக்கா வீரர் டேல் ஸ்ரெயின், மைதானத்தில் காணப்படும் அதி உஷ்ணம் நிலை காரணமாக மைதான ஊழியர் ஒருவரினால் தண்ணீரை தலையில் ஊற்றுவதனை படத்தில் காணலாம்.



உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டிக்காக வெறுங்காலுடன் பயிற்சியில் ஈடுபடும் இந்திய வீரர்கள்

## இலங்கை...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ள நிலையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவாவில் கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்த அரசாங்கம் ஆக்கபூர்வமான வகையில் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் பேச்சாளர் பர்ஹான் ஹக். நியூயோர்க்கில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

குற்றச்செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படல் மற்றும் பொறுப்புக் கூறல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை பான் கீ மூன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அர்ப்பணிப்பு பாராட்டுக் குரியது என அவர் தெரிவித்துள்ளார். தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் காத்திரமான முறையில் பங்களிப்பினை வழங்க வேண்டுமென மூன் சுட்டிக்காட்டியுள்ளதாக அவரது பேச்சாளர் குறிப்பிட்டார். (செ-11)

# உலகக் கிண்ண இருபது-20 அரையிறுதி இலங்கை-மேற்கிந்திய தீவுகள்

## இன்று பலப்பரீட்சை

உலகக் கிண்ண இருபது-20 போட்டியில் நேற்று முன்தினம் 'சூப்பர் 10' சுற்று ஆட்டம் முடிந்தது.

நேற்று முன்தினம் நடந்த கடைசி லீக் ஆட்டங்களில் மேற்கிந்திய தீவுகள் 84 ஓட்டங்களில் பாகிஸ்தானையும், அவுஸ்திரேலியா 7 விக்கெட்டில் பங்காளதேஷையும் தோற்கடித்தன.

'சூப்பர் 10' சுற்றில் 10 அணிகள் விளையாடின. அவை 2 பிரிவாக பிரிக்கப்பட்டு இருந்தது. 'குழு 1' பிரிவில் இருந்து இலங்கை, தென்னாபிரிக்கா அணிகளும், 'குழு 2' பிரிவில் இருந்து இந்தியா, மேற்கிந்திய தீவுகள் அணிகளும் அரை இறுதிக்குத் தகுதி பெற்றன.

2010-ம் ஆண்டு சம்பியன் இங்கிலாந்து, நியூசிலாந்து, நெதர்லாந்து (குழு 1), 2009-ம் ஆண்டு சம்பியன் பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, பங்காளதேஷ் (குழு 2) ஆகிய அணிகள் வெளியேற்றப்பட்டன. முதல் அரை இறுதி ஆட்டம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.



இதில் இலங்கை- மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதுகின்றன. இரு அணிகளும் சமபலம் பொருந்தியவை என்பதால் ஆட்டம் விறு விறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இல ங்கை அணி 3-வது முறையாக இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும் ஆர்வத்தில் உள்ளது. நடப்பு சம்பியனான மேற்கிந்திய தீவுகள் 2-வது முறையாக இறுதிப் போட்டிக்கு நுழையும் ஆர்வத்தில் இருக்கிறது.

இன்றைய ஆட்டம் இலங்கை நேரப்படி மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகின்றது.

**இரு அணி வீரர்கள் விபரம்:-**

இலங்கை:- சண்டிமல் (அணித்தலைவர்), குஷால் பெரேரா, டில்சான், ஜெயவர்த்தன, சங்ககார, மத்யூஸ், திரிமானே, பெரேரா, குலசேகர, சேனநாயக்க, ஹெரத், மலிங்க, லக்மல், மெண்டீஸ், பிரசன்ன.

மேற்கிந்திய தீவுகள்:- டரன் சமி (அணித்தலைவர்), கிறிஸ் கெய்ல், ஸ்மித், சிம்மன்ஸ், சாமுவேல்ஸ், பிராவோ, ராம்டின், ரஸ்சல், சுனில் நரேன், பத்ரி, சன்டோக்கி, சார்ல்ஸ், கோட்ரெல், ராம்போல், பிளட்சர். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

(கரவெட்டி)

கரணவாய் சோழங்கன் விளையாட்டுக் கழகம் நடத்தும் இருபது-20 கிரிக்கெட் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை கரணவாய் மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அணிக்கு 11 பேர் கொண்ட மேற்படி போட்டி யாழ்.மாவட்ட ரீதியாக இடம்பெறவுள்ளது.

இக் கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்கும் கிரிக்கெட் கழகங்கள் 0771041691 என்னும் இலக்கத்தோடு தொடர்பு கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (க-24)

## அ.அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவாந்துறையைச் சேர்ந்த தங்கராஜா ஜெனிவா (812863720V) என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் கைப்பை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் மேற்பார்வையாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (செ-11)

## ‘இராணுவத் தரப்பினரிடம் சரண...

வவுனியா மேல் நீதிமன்றத்தில் 14 ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்திருக்கின்றனர்.

அவற்றில் முதல் ஐந்து வழக்குகள் தொடர்பிலான நிகழ்வுகள் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மேல் நீதிமன்றம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தது.

முதலாவது வழக்கின் நிகழ்வு பற்றிய விசாரணையில் சாட்சியமளித்த பெண் ஒருவர், தனது மகளும மருமகனும் அவர்களின் 4 மற்றும் 6 வயதான இரண்டு பிள்ளைகளும இராணுவத்தினரிடம் சரணடைந்த பன்னர், தனது மகளின் முழு குடும்பமும் இப்போது காணாமல் போயிருப்பதாக கூறியிருக்கின்றார்.

எனினும், இந்த சம்பவம் பற்றி யுத்தம் முடிவடைந்து ஓர் ஆண்டுக்குப் பின்னர் 2010 ஆம் ஆண்டிலேயே பதிவாகியுள்ளதாகவும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், இறுதி யுத்தத்தின்போது எவரும் இராணுவத்தினரிடம் சரணடைந்ததாக தகவல்கள் இல்லையென்றும் அரச தரப்பினரால் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, மன்றில் சாட்சியமளித்த குறித்த பெண், இறுதி யுத்தத்தின்போது தான் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த தேவிபுரம் வைத்தியசாலை எறிகணை தாக்குதலுக்கு உள்ளாகியதாகவும், பின்னர் அங்கிருந்து இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்காலுக்குச் சென்றிருந்தபோது யுத்தம் முடிவுக்கு வந்ததாகவும் கூறினார்.

அப்போது, லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து இருந்த நிலையில், விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்திருந்தவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் சட்ட ரீதியான மன்னிப்பும் வழங்கப்படும் என்றும் உத்தரவாதமளித்து, அவர்களை சரணடையுமாறு ஒலிபெருக்கிகளில் அறிவிக்கப்பட்டதையடுத்தே, தனது மகளின் குடும்பம் முழுமையாக இராணுவத்தினரிடம் சரணடைந்தது என்றும் அந்தப் பெண் கூறினார்.

அவர்கள் சரணடைந்ததைத் தான் நேரில் கண்டதாகவும், அதே போன்று தனக்குத் தெரிந்த பலர் இராணுவத்தினரிடம் சரணடைந்ததையடுத்து, அவர்கள் இராணுவ வாகனங்களில் இராணுவத்தினரால் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

அத்துடன் யுத்தம் முடிவடைந்ததையடுத்து காணாமல் போனவர்கள் தொடர்பில் செஞ்சிலுவைக் குழு, காவல்துறையினர் உள்ளிட்ட பல தரப்பினரிடமும் முறையிட்டிருந்ததாகவும், வட்டுவாகலில் இருந்து ஏனைய இடம்பெயர்ந்த மக்களுடன் செட்டிக்குளம் இடைத்தங்கல் முகாமில் ஒரு வருடம் தான் தங்க வைக்கப்பட்டிருந்த படியால், காணாமல்போனவர்கள் பற்றி உடனடியாக முறையிட முடியவில்லை என்றும் அவர் சாட்சியமளித்தார்.

இதனையடுத்து, இந்த வழக்கு தொடர்பான விசாரணைகளை மே மாதம் 7 ஆம் 8 ஆம் திகதிகளுககு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் எம்.கணேசராஜா ஒத்திவைத்துள்ளார்.

மனுதாரர்கள் சார்பில் கே.எஸ். ரட்னவேல், அன்டன் புனிதநாயகம, பரஞ்சோதி ஆகியோர் வாதிட்டனர். எதிர் தரப்பில் அரச சட்டத்தரணி சிஹான் டி சில்வா ஆஜராகியிருந்தார். (செ-11)

## அனுபவமுள்ள வைத்...

பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, சாவக்சேரி ஆதார வைத்தியசாலையில் பணிபுரிந்து வரும் வைத்தியர்கள் இருவரை உடனடியாக அங்கிருந்து இடமாற்றம் செய்யுமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு அவர்களின் இடமாற்றம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வைத்திய ஆளணி பற்றாக்குறை மற்றும் இடமாற்றக்காலம் என்பனவற்றைக் கருத்தில் கொணடு வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும் தனியார் வைத்தியசாலைகளில் தமக்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்வதனாலும் குறித்த இரு வைத்தியர்களுக்கும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துசெல்வதாலும் உடனடியாக அவர்களை இடமாற்றம் செய்ய வேண்டுமென சிலரால் தொடர்ந்து அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருவதாக கூறப்படுகின்றது.

இலாப நோக்கம் கருதி திட்டமிட்டு பழிவாங்கும் வகையில் தமக்கிருக்கும் செல்வாக்கினை பயன்படுத்தி வைத்தியர்களை இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதனால் பெண் வைத்தியர்கள் சிலர் தமது வைத்திய பணியிலிருந்து ஒதுங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (செ-6)

## தேர்தல் முடி...

சாய்க்க வேண்டும்.

அடுத்து நடைபெறும் தேசிய ரீதியான தேர்தலில் என்ன செய்ய வேண்டும் என்பதை அப்போது பார்த்துக்கொள்ளலாம்.

எனினும் இந்த சந்தர்ப்பத்தில் மக்கள் ஒன்றாக இணைந்து வேர் தளர்த்தப்பட்ட அரசாங்கம் என்ற மரத்தை தள்ளி சாய்க்க வீதியில் இறங்க வேண்டும் எனவும் ரணில் விக்ரமசிங்க கூறினார். (செ-11)

## வடக்கில் கண்ணிவெடி...

கப்பெறுவதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

கம்போடியா மற்றும் வியட்நாம் நாடுகளைவிட கண்ணிவெடி அகற்றும் பணிகளில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, கடல் வழியாக இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய கடற்படை ஊடகப் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்தார்.

புலனாய்வு துறையினருடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப் படுகின்ற போதும் அதிக போதைப் பொருள் வர்த்தக கொடுக்கல் வாங்கல் சர்வதேச கடல் எல்லையில் இடம பெறுவதால் அதனை தடுக்க தமக்கு வழி இல்லை என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், ஒவ்வொரு மீன்பிடி படகுகளையும் சோதனை செய்ய முடியாது எனவும் கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (செ-11)

## மலேசிய விமானத்தின்...

நம்மால் அறிய முடியாமல் போகலாம் என்றும் அவர் கூறினார்.

இதுவரை இந்த விமானத்தின் விமானிகள் மற்றும் அந்த விமான ஊழியர்களின் குடும்பத்தினரிடம் சுமார் 170க்கும் மேற்பட்ட முறைகள் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன என்று கூறிய அவர், மேலும் கூறப் போனால், விமானத்திற்குள் எடுத்துச் செல்லப்பட்ட சரக்குப் பொதிகள், வழங்கப்பட்ட உணவு போன்றவைகளில் ஏதேனும் நாசவேலை நடந்திருக்கிறதா என்று கூட ஆராயப்பட்டுவிட்டது என்றார்.

இதனிடையே, விமானத் தேடல முயற்சி நேற்று புதன்கிழமையன்றும் தொடர்ந்தது என்று புதிதாக இந்த விமானத்தைத் தேடும் பணியை ஒருங்கிணைப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள, கூட்டு பல் நிறுவன ஒருங்கிணைப்பு மையம் கூறியிருக்கிறது.

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் இருந்து இந்த மையம் இயங்குகிறது.

நேற்று நடத்தப்பட்ட இந்தத் தேடல முயற்சி, சுமார் 2.21 லட்சம் சதுர கிமீ பரப்பளவில் நடத்தப்பட்டது என்று கூறிய அந்த மையம், கடல் பரப்பில் நிலவும் மூடுபனியும், ஆங்காங்கே வீசும் புயற்காற்றும், மேகமூட்டமும் இந்தத் தேடல் முயற்சியைப் பாதிப்படையச் செய்தது எனக் கூறியது.

இதனிடையே, மலேசியப் பிரதமர் நஜிப் ரஸாக், தேடல் முயற்சிகள் குறித்து விவாதிக்க, அவுஸ்திரேலியா விரைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## கோத்தபாய...

தின் கீழ் இரண்டாவது கட்டமாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளே இவ்வாறுபொது மக்களிடம் கையளிக்கபபட உள்ளன.

அதேவேளை விமானப்படை முகாம்களுக் காக கையகப்படுத்தப்பட்டிருந்த சுமார் 100 வயல் காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட உள்ளன.

அத்துடன்இராணுவ பயன்பாட்டுக்காக கைப்பற்றப்பட்டிருந்த பல வீடுகள் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட உள்ளதாக தெரியவருகின்றது. (செ-11)







| | பழைய விலை | தள்ளுபடி விலை |
|---|---|---|
| சோபா செற் | ~~40,400~~/- | 35,820/- |
| அலுமாரி | ~~13,250~~/- | 9,900/- |
| கட்டில் | ~~8,750~~/- | 5,900/- |
| கணனி மேசை | ~~3,940~~/- | 3,180/- |
| TV ஸ்ராண்ட் | ~~6,215~~/- | 3,980/- |
| கணனி கதிரை | ~~4,300~~/- | 3,690/- |
| கண்ணாடிச் சாப்பாட்டு மேசை | ~~31,500~~/- | 22,900/- |


## மரண அறிவித்தல்

## இளையதம்பி கந்தசாமி



அளவெட்டி தெற்கு அளவெட்டி அருவம்பற்றை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கந்தசாமி (மாவடிக் கந்தசாமி) நேற்று (02.04.2014) புதன்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் கௌரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சேதுப்பிள்ளை, செல்லாச்சிப்பிள்ளை, சபாபதி மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்தகுமார், வசந்தசீலன், ரதி (பிரான்ஸ்), கனி, வசந்தசுதன் (பிரான்ஸ்), வசந்தரூபன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும். சிவராகினி, நிர்மலா, அம்பிகைபாக்ன் (பிரான்ஸ்), திருவருட் செல்வம், ஜெயகலா (பிரான்ஸ்), பவானி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும். ரூபினி, ஜெனாகரன், கோகுலன் (பிரான்ஸ்), ராகுலன் (பிரான்ஸ்), அபிகுலன் (பிரான்ஸ்), கௌசிகன், கேசிகா, பிரவீன் (பிரான்ஸ்) வர்ஷா (பிரான்ஸ்) வினயா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (03.04.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி தெற்கு,
அருவம்பற்றை.

தகவல் :-
குடும்பத்தினர்

(6051)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.